Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 213 | திங்கட்கிழமை 27 ஜூன் 2022 | ஆனி 13 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50

## மின்வெட்டு நேரம் மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 27
இன்று தொடக்கம் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை நாளாந்தம் 3 மணித்தியாலங்களுக்கு மின்வெட்டை

15 >

# எரிபொருள் விநியோக ஒழுங்கு முப்படையினரிடம் கையளிப்பு

## 'ரோக்கன்' நடைமுறை அறிமுகம்

## ஒரு வருடத்துக்கு நெருக்கடி தொடரும்

*அமைச்சர் காஞ்சன விஜயசேகர அறிவிப்பு*



**கொழும்பு, ஜூன் 27**
**எரிபொருள் நெருக்கடி முழுமையாகத் தீர்வதற்கு ஓராண்டாவது தேவை. அதுவரையில் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பங்களிப்புடன் நாடு முழுவதும் எரிபொருள் விநியோகத்துக்கு 'ரோக்கன்' நடைமுறை பின்பற்றப்படும். பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது- இவ்வாறு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.**

15 >

## நகரப் பாடசாலைகளுக்கு இந்த வாரமும் விடுமுறை

*கல்வி அமைச்சு நேற்று அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 27
நாடு முழுவதுமுள்ள அனைத்து பிரதான நகரங்களிலுமுள்ள பாடசாலைகளுக்கு இந்த வாரமும் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண கல்வி அதிகாரிகளுடன் இடம்பெற்ற

15 >

## தெல்லிப்பழை மருத்துவமனையின் மருந்துக்களஞ்சியத்தில் தீ விபத்து

*மின் ஒழுக்கே காரணம்*

யாழ்ப்பாணம், ஜூன் 27
பாவனையிலிருந்து மீளப்பெறப்பட்ட மற்றும் காலாவதியான மருந்துகள் வைக்கப்பட்டிருந்த மருந்துக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் ஒரு தொகுதி மருந்துகள் அழிவடைந்துள்ளன. தெல்லிப்பழை

15 >

## சேமிக்கப்பட்ட பெற்றோல் எமனானது பெற்றோருக்கு!

*இரு பிள்ளைகள் ஆபத்தான கட்டத்தில்!*

கொழும்பு, ஜூன் 27
கொழும்பு மாவட்டத்தின் கஹதுட்டுவ பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி கணவன், மனைவி இருவரும் உயிரிழந்துள்ளதுடன் அவர்களது இரண்டு பிள்ளைகளும் ஆபத்தான நிலைமையில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். தீ விபத்து ஏற்பட்டதில் பலத்த காயமடைந்த 41 வயதான கணவன் மற்றும் 38 வயதான மனைவி இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரி

15 >

## பணம் கொடுத்தாலும் வழங்குநர்கள் எரிபொருள் வழங்கத் தயாரில்லை

*கூறுகிறார் அமைச்சர் காஞ்சன*

கொழும்பு, ஜூன் 27
நாம் பணம் வழங்கி எரிபொருளைக் கொள்வனவு செய்ய முயன்றாலும் சில வழங்குநர்கள் நம்பிக்கையீனம் காரணமாக எரிபொருளை வழங்க மறுக்கின்றனர் என்று அமைச்சர் காஞ்சன தெரிவித்தார். அவர் ஊடக சந்திப்பில் மேலும்

15 >

## எரிபொருள் அட்டையுடன் 'ரோக்கன்' நடைமுறை

***யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறார் மாவட்டச் செயலர்***

யாழ்ப்பாணம், ஜூன் 27
யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் தொடக்கம் எரிபொருள் அட்டைக்கே எரிபொருள் விநியோகம்

15 >

## எரிபொருள் விலைகள் நேற்று மீண்டும் அதிகரிப்பு

*ஓராண்டுக்குள் பெற்றோல் 313 ரூபாவால் அதிகரிப்பு*

கொழும்பு, ஜூன் 27
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று அதிகாலை 2 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்துள்ளது. அதன்படி 92 ஒக்ரேன் பெற்றோல்

15 >

## எரிபொருள் விவகாரம்; கட்டார் பறக்கிறார் அமைச்சர் காஞ்சன

கொழும்பு, ஜூன் 27
நாட்டுக்குத் தொடர்ச்சியாக எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக கட்டாரின் அழைப்பின் பேரில் அமைச்சர் காஞ்சன விஜயசேகர இன்று அந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். (அ-ஓ-இ)

## அரச பணியாளர்களுக்கு வீட்டிலிருந்து வேலை

- அலுவலகக் கூட்டங்களை இணையத்தில் நடத்துமாறு அறிவுறுத்து
- மீண்டுமொரு சுற்றறிக்கை நேற்று வெளியீடு

கொழும்பு, ஜூன் 27
அரச பணியாளர்களை அலுவலகங்களுக்கு அழைப்பதை மட்டுப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின்படி, அன்றாடப் பணிகளை இடையூறு இன்றி மேற்கொள்ள குறைந்தபட்ச

15 >

### பெற்றோல் வழங்குவதாக உறுதியளித்தும்

## இ.போ.ச. பணிப்புறக்கணிப்பு; எந்தவொரு மாற்றமும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 27
இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய சாலை பணியாளர்களுக்குத் தேவையான பெற்றோலை வழங்குவதற்கு வட மாகாண ஆளுநரும், யாழ். மாவட்டச் செயலரும் உறுதியளித்துள்ள போதும் வடக்கிலுள்ள 7 சாலைகளில்

15 >

## 21 ஆம் திருத்தச் சட்டவரைவு 22 ஆம் திருத்தமாக மாற்றம்

*அமைச்சரவை அனுமதிக்கு இன்று சமர்ப்பிக்கப்படுகின்றது*

யாழ்ப்பாணம், ஜூன் 27
அமைச்சரவையால் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்ட 21ஆம் திருத்தச் சட்டவரைவு இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் மீளவும் சமர்ப்பிக்

15 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதே கேள்வி!

*அதற்கு முதலில் பதிலளிக்க வேண்டும் என மனோ வலியுறுத்து*

**கொழும்பு, ஜூன் 27**

**காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் முதல் கேள்வி, கடத்தப்பட்டு, சரணடைந்து, கைதாகி காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது என்பதே இந்த முதல் கேள்விக்கு உடனடியாக பதில் வழங்கப்படவேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:-

வடக்குக்குச் சென்ற நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவும், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக தலைவர் மஹேஷ் கடுலந்தவும் "மக்கள் ஒத்துழைத்தால், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு காணலாம்" எனக் கூறியுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களுக்குக் கொடுப்பனவுகள், வேலைவாய்ப்புக்களில் முன்னுரிமை, அரச மருத்துவமனைகளில் முன்னுரிமை எனவும் வாக்குறுதிகளை அளித்துள்ளனர்.

மக்களிடமிருந்து என்ன ஒத்துழைப்பை இவர்கள் கோருகிறார்கள் என எனக்குத் தெரியவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் முதல் கேள்வி, முதல் கோரிக்கை, நானறிந்த வரையில், கடத்தப்பட்டு, சரணடைந்து, கைதாகி காணாமற் போன தங்கள் உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது என்பதே. இந்த முதல் கேள்விக்கு பதில் தேடுங்கள். அதன் பின்னர் குடும்பங்கள் விரும்பினால், கொடுப்பனவுகள், வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை, அரச மருத்துவமனைகளில் முன்னுரிமை ஆகியவற்றை வழங்கலாம். இதை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவும், காணாமற் போனோர் அலுவலக தலைவர் மஹேஷ் கடுலந்தவும் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த ஆட்சியின்போது பல கட்டமைப்பு முன்னேற்றங்கள் நிகழ்ந்தாலும்கூட, அன்று எதிர்க்கட்சியாக இருந்த, இன்றைய ஆளுங்கட்சியான ராஜபக்சக்களின் பொதுஜன முன்னணி எம்மை முழுமையாக கடமையாற்ற விடவில்லை. பிரபல பிக்குகள் இனவாதம் கக்கினார்கள்.

இன்றும் இனவாதம் இல்லாமல் இல்லை. ஆனால், அந்த இனவாதத்தை நேரடியாக எதிர்க்கக் கூடிய காலம் வந்து விட்டது. இன்றைய பொருளாதார நெருக்கடி அந்தச் சூழலை உருவாக்கிவிட்டது. நாங்கள், "எங்கே எங்கள் உறவுகள்? கடத்தப்பட்டு, சரணடைந்து, கைதாகி காணாமற் போன எங்கள் உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா?" என கேள்விகள் எழுப்பும் வேளை வந்துவிட்டது- என்றுள்ளது. (எ-இ)

# விலைகளை உயர்த்தினாலும் கூட்டுத்தாபனத்துக்கு நட்டமே

*அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு*



கொழும்பு, ஜூன் 27

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போதும் நட்டத்தையே எதிர்கொண்டு வருகின்றது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன வீரசேகர தெரிவித்தார்.

நேற்று எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அண்மைய எரிபொருள் விலைத் திருத்தம் தொடர்பான கணக்கீடுகளை தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ள அவர், புதிய விலை திருத்தத்தின் பின்னரும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தையே எதிர்நோக்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 334.39 ரூபா இழப்பு ஏற்படுகின்றது என்றும், ஓட்டோ டீசல் ஊடாக 8.52 ரூபா இழப்பு ஏற்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் ஒக்ரேன் 92 ரக பெற்றோலில் 15.57 ரூபா இலாபமும், ஒக்ரேன் 95 ரக பெற்றோல் ஊடாக 68.61 ரூபா இலாபமும் மற்றும் சுப்பர் டீசலில் 20.27 ரூபா இலாபமும் கிடைக்கின்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# எரிபொருளைப் பதுக்கிய சுமார் 600 பேர் சிக்கினர்!

*64,000 லீற்றர் எரிபொருளும் மீட்பு*

கொழும்பு, ஜூன் 27

நாட்டின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக எரிபொருள் பதுக்கல் தொடர்பில் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் சுமார் 64 ஆயிரம் லீற்றருக்கும் அதிக பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டுள்ளன. 600க்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலுள்ள எரிபொருள் தாங்கிகளை திறந்து காண்பிக்கவேண்டும் என்று பொதுமக்களால் பொலிஸார் வற்புறுத்தப்படுகின்றது என்று தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், அனைவரதும் பாதுகாப்பையும் கருதி அவ்வாறான செயற்பாடுகளில் தலையிடவேண்டாம் என்றும் பொலிஸ் தலைமையகத்தால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

எரிபொருள் பதுக்கல் தொடர்பில் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை வரை 670 சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 675 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ரயில் கட்டணத்தையும் உயர்த்தக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 27

ரயில் கட்டணத்தை சுமார் 50 வீதத்தால் அதிகரிக்கவேண்டும் என்று அமைச்சரவையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு ஒரு ரயில் ஒரு லட்சம் லீற்றருக்கு மேல் எரிபொருளைப் பயன்படுத்துவதால் கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என அதன் பேச்சாளர் பிரதிப் போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்ன தெரிவித்தார். (எ-இ)

# அதிவேக நெடுஞ்சாலை வருமானமும் சரிந்தது!

கொழும்பு, ஜூன் 27

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அதிவேக நெடுஞ்சாலையின் நாளாந்த வருமானம் 15 முதல்16 மில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது என்று நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு பணிப்பாளர் நிஹால் லூடோவிக் தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடிக்கு முன்னர் அதிவேக நெடுஞ்சாலைகளின் போக்குவரத்துடன் ஒப்பிடும்போது அதிவேக நெடுஞ்சாலை வருமானம் கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்துள்ளது. எரிபொருள் நெருக்கடிக்கு முன்னர் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு கட்டுநாயக்க வீதி மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துச் செய்யும் வாகனங்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு ஒரு லட்சத்து 2 ஆயிரமாக இருந்தது என்றும், அது தற்போது 55 ஆயிரம் முதல் 60 ஆயிரமாக அந்த எண்ணிக்கை குறைந்துள்ளது என்று புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

எரிபொருள் நெருக்கடிக்கு முன்னர் அதிவேக நெடுஞ்சாலையின் சராசரி தினசரி வருவாய் 28 மில்லியன் ரூபா என்று நிஹால் லூடோவிக் தெரிவித்தார். (எ-இ)

# ரஷ்யாவின் கால்களில் விழுகின்றது இலங்கை

*இரு அமைச்சர்கள் பயணம்*

கொழும்பு, ஜூன் 27

அமைச்சர்கள் இருவர்கள் இன்று ரஷ்யாவுக்குப் பயணிக்கவுள்ளனர் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு அமைச்சர்கள் இருவரும் ரஷ்யா பயணிக்கவுள்ளனர் என்றும், இந்தப் பயணத்தின் போது எரிபொருள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சின் ஊடாக இலங்கைக்குச் சாதகமான பதிலொன்றை எதிர்பார்க்கின்றோம் என்றும் எரிசக்தி அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (எ-இ)

# கடந்த 6 மாதங்களில் மட்டும் 399 பேர் ஆஸி.க்கு தப்ப முயற்சி!

கொழும்பு, ஜூன் 27

2022ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 399 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சட்டவிரோதமாக இடம்பெயர முயற்சிப்பவர்களிடம் இருந்து கடத்தல்காரர்கள் 2 லட்சம் முதல் 10 லட்சம் ரூபாவரை பெற்றுக்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேநேரம் கடத்தல்காரர்கள் பழுதடைந்த மற்றும் உடைந்த படகுகளையும் சட்டவிரோத நடவடிக்கைகளில் பயன்படுத்துகின்றனர்.

இந்த நடவடிக்கையில் ஈடுபடும் கடத்தல்காரர்களுக்கு 1 முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துக் கட்டணங்கள் 40 வீதத்தால் எகிறலாம்

**கொழும்பு, ஜூன் 27**
**எரிபொருள் விலையேற்றத்தை தொடர்ந்து, பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்குமாறு அனைத்து இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுக்கின்றது.**

இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தில் பிரதம செயலாளர் அஞ்ஜன பிரியஜித் இதுதொடர்பில் மேலும் தெரிவித்தாவது:-

மீண்டுமொரு தடவை எரிபொருள் விலையேற்றம் பெரும் நெருக்கடிக்குள் எம்மைத் தள்ளியுள்ளது. இதனால், பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டிய கட்டாயத்துக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். பேருந்துக் கட்டணத்தை 35 முதல் 40 வீதத்தால் அதிகரிக்கவேண்டும்.

இந்த விலை அதிகரிப்பானது, நாளை (இன்று) முதல் அதிகரிக்கப்படவேண்டும். இந்த புதிய விலைத் திருத்தத்தின் பிரகாரம், ஆகக் குறைந்த கட்டணமாக 40 ரூபா நிர்ணயிக்கப்படவேண்டும் - என்றார். (ம)



## சிற்றுண்டிகளின் விலை 10 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 27
கொத்து ரொட்டி, சோறு, உணவுப்பொதிகள் உட்பட அனைத்து உணவுப் பொருள்களின் விலைகளையும் 10 வீதத்தால் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் சகல பொருள்களின் விலையேற்றம் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# கட்டணம் உயர்த்தப்படாவிடின் சேவை நிறுத்தத்துக்கு முடிவு!

*தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 27
டீசல் விலை அதிகரிப்பையடுத்து, பேருந்துக் கட்டணத் திருத்தம் தொடர்பில் பரிசீலிக்குமாறு இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கு சாதகமான பதில் கிடைக்காவிடின் நாளை முதல் பேருந்துச் சேவைகள் நிறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்தாவது:-

வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம் ஒவ்வொரு ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்குவரும். குறுகிய காலத்துக்குள் இரண்டு முறை எரிபொருள் விலையேற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இப்போது, பேருந்துகளை நட்டத்தில் இயக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே, திங்கட்கிழமைக்குள் (இன்று) வருடாந்த பேருந்து கட்டணதிருத்தத்துக்குப் பச்சைக் கொடி காட்டப்படாவிட்டால், செவ்வாய்க்கிழமை (நாளை) முதல் பேருந்துச் சேவையை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார். (ம)

## ஜூலை 6இல் லிட்ரோ எரிவாயு விநியோகம்

கொழும்பு, ஜூன் 27
எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதிக்குப் பின்னர் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய 6ஆம் திகதிக்குப் பின்னர் ஒரு லட்சத்து 20 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு வெளியிட எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி, நாளொன்றுக்கு 12.5 கிலோகிராம் எடையுள்ள 80 ஆயிரம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கத்திட்டமிட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-14-இ)

## எரிபொருள் வரிசைகளில் நிற்போர் இரண்டு லீற். தண்ணீர் அருந்தவும்

கொழும்பு, ஜூன் 27
எரிபொருள் வரிசையில் மணிக்கணக்காகக் காத்திருப்போர் குறைந்தபட்சம் இரண்டு லீற்றர் தண்ணீர் அருந்தவேண்டும் என்று பொரளை மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் போசாக்கு நிபுணர் மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் தற்பொழுது எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர். இவ்வாறானபின்னணியில் எரிபொருள் வரிசையில் காத்திருப்போருக்கு அவசர மருத்துவ ஆலோசனையாக இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் குருதியமுத்தம், இருதய நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தங்களது மருந்து மாத்திரைகளையும் தம்வசம் வைத்திருக்க வேண்டும். வாகனங்களின் உள்ளே நீண்டநேரம் காத்திருப்பதைத் தவிர்த்து முடிந்தளவு வெளியில் இருங்கள் என்றும் அவர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம)

# எரிபொருள் நெருக்கடியால் மின் திருத்தப்பணிகள் தாமதம்

நாட்டில் ஆங்காங்கு ஏற்படுகின்ற மின்தடை திருத்த வேலைகளை சரி செய்வதில் இலங்கை மின்சார சபை கடும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது என மின்சார சபை தெரிவித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக மின் தடை ஏற்பட்டுள்ள பகுதிகளுக்குத் திருத்தப்பணியாளர்களை அனுப் [illegible] வரத்து வசதியின் [illegible] இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

பராமரிப்புப் பணியாளர்களை திருத்துமுள்ள இடங்களுக்கு அனுப்ப முடியாததால் பழுதை [illegible] [illegible] மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)




'திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது' அதைச் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் 'தடுத்துக் கொண்டே இருக்குது' எண்டு ஒரு எம்.ஜீ.ஆர் படப்பாட்டு ஒண்டு இருக்குது. அதை இனிமேல் 'சட்டம் போட்டுக் குழப்பிற கூட்டம் குழப்பிக்கொண்டே இருக்குது' எண்டுதான் பாடவேணும் போல. அந்தளவுக்கு எங்கட கோதாரி விழுந்த அரசாங்கம், சுற்றறிக்கை, வர்த்தமானி, புதுப்புது ரூல்ஸ் எண்டு ஒண்டு மாத்தி ஒண்டா விட்டுக் கொண்டே இருக்குது. இந்தச் சுற்றறிக்கையை ஏன் விடுகினம் எண்டு அரசாங்கத்துக்கும் தெரியேலை. அதை வாசிக்கிற அதிகாரிகள், உத்தியோகத்தர் மாருக்கும் அது விளங்கேலை. அப்பிடி ஒரு நூதனமான சுற்றறிக்கைகளை விட்டு, எல்லாரையும் அரசாங்கம் 'சுத்தல்ல' விட்டிருக்கு.

நேற்றுக்கூட, அரசாங்க உத்தியோகத்தர் மாரை நல்லாக் குறைச்சு வேலைக்கு வரச்சொல்லி சுற்றறிக்கை வந்திருக்கு. ஏற்கனவே அத்தியாவசியமான ஆக்களை மட்டும் ஒப்பீஸுக்கு கூப்பிடச் சொல்லி வந்ததுக்கு மேலதிகமா இப்பிடி இரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கு. அப்பிடியெண்டால், அத்தியாவசியப் பணியாளரிலையும் ஆக்களைக் குறைச்சு வரச்சொல்லியிருக்கினமா எண்டது அதிகாரிமாருக்கே விளங்கேலை. அதாவது 'அத்தியாவசியத்திலும் அநாவசியமான' பணியாளரை வேலைக்கு கூப்பிடக் கூடாதெண்டு சொல்லுப்பட்டிருக்கா? இல்லாட்டி முதலே அறிவிச்சபடி அவசியமான எல்லாரையும் அலுவலகத்துக்கு அழைக்கிறதா ? எண்டு கனபேருக்கு குழப்பம். என்னதான் சுற்றறிக்கை வந்தாலும், ஒப்பீஸில உள்ள முழுப்பேரையும் 'அத்தியாவசியம்' எண்டு சொல்லி எல்லாரையும் அலையவைக்கிற கதைதான்வடக்கில நடக்கும் எண்டது வேற கதை.

அதைவிட, பள்ளிக்கூடம் நடத்திறதிலையும் குழப்பநிலை.நகரப்பாடசாலைகளை நடத்தவேண்டாம், கிராமப் பாடசாலைகளை நடத்தலாம், கிழமையில மூண்டு நாள் ஸ்கூல் நடத்துங்கோ, ஆனால் முடிவை வலய, மாகாண அதிகாரிகள் எடுக்கலாம் எண்டு இன்னொரு அறிவிப்பு. இப்ப எது நகரம்?எது கிராமம்? எண்டு கண்டுபிடிக்கிறது. அவையவைக்கு அவையின்ர இடம் நகரமாத்தானே இருக்கும். அதோட திங்கள், வெள்ளி பள்ளிக்கூடம் நடக்குமா இல்லையா? எண்டதையும் ஒழுங்காச் சொல்லாமல் எல்லாரையும் இந்த அரசாங்கம் குழப்பி வைச்சிருக்கு.

இன்னொரு குழப்பங்காய்ச்சி வேலை, ஆமியைக் கொண்டு பெற்றோலுக்கு ரோக்கன் குடுக்கிறது. இப்பதான் ஒருமாதிரி, பங்கீட்டு அட்டைக்கு எரிபொருள் எண்ட திட்டத்தைக் கொண்டுவர மாவட்டச் செயலகங்கள் நடவடிக்கை எடுக்கேக்க, ஆமி குடுக்கிற ரோக்கனுக்குத்தான் எரிபொருள் எண்டால், குழப்பம் வரத்தானே செய்யும். இந்தக் குழப்பம் காணாதெண்டு, 'ரோக்கனும் குடுப்பம், கார்ட்டுக்கும் அடிப்பம்' எண்டு எல்லாத்தையும் கலந்து இன்னொரு குழப்பமான அறிவிப்பை யாழ்ப்பாணம் கச்சேரிப் பெரியவர் நேற்றுவிட்டிருக்கிறார்.

உந்தக் குழப்பங்களுக்கு எண்டைக்குத்தான் விடிவுகாலமோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமான கடற்றொழிலுக்கு எவ்வாறு எரிபொருள் கிடைக்கின்றது?

## கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் கேள்வி

**முல்லைத்தீவு, ஜூன் 27**

**நாட்டில் தற்போது நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாட்டால் சட்டவிரோதமாக கடற்றொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வாறு எரிபொருள் கிடைக்கின்றது? - இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் அருள்நாதன் வின்சன்டிபோல்.**

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இடம்றும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை, ஊடகவியலாளர்களுக்கு நேற்றுமுன்தினம் நேரடியாகக் காண்பித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எரிபொருள் தட்டுப்பாட்டால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மீனவர்கள் பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். மீனவர்கள் பலர் கடற்றொழிலுக்குச் செல்லமுடியாத நிலையில் உள்ளனர். அத்தோடு பலரிடம் குறைந்தளவில் எரிபொருளைப் பெற்றுச் சேகரித்து, ஓரிரு மீனவர்களே கடற்றொழிலுக்குச் சென்றுவருகின்றனர். அவ்வாறு கடற்றொழிலுக்குச் சென்று வருகின்ற மீனவர்களுக்கு, மிகக் குறைந்த அளவிலேயே மீன்கள் கிடைக்கின்றன.

எரிபொருளுக்காகச் செலவிடும் பணத்தைக்கூட, மீன்பிடியின்மூலம் பெற்றுக்கொள்ளமுடியாத அவலநிலை காணப்படுகின்றது. இதனால் அவர்களின் நாளாந்த வாழ்வாதாரம் மிகவும் பாதிப்படைந்துள்ளது. இவ்வாறாக மீனவர்கள் பல்வேறு அவலநிலைகளுக்கு முகங்கொடுத்துவருகின்ற நிலையில் முல்லைத்தீவு கடற்பரப்பில் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. சட்டத்துக்குட்பட்டு மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் எரிபொருளுக்காக இடர்படும் நிலையில், சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வாறு எரிபொருள் கிடைக்கின்றது?

இந்தச் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு பலதடவைகள் நாம் கடற்றொழில் அமைச்சர், முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம், முல்லைத்தீவு மாவட்டச்செயலர், கடற்படையினர் உள்ளிட்ட உரிய தரப்புகளிடம் முறையிட்டுள்ளோம்.

இருப்பினும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே இதுதொடர்பில் தொடர்ந்தும் உரியதரப்பினர் நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றை நாடி, சட்டநடவடிக்கை எடுக்கும் முயற்சியிலும் நாம் ஈடுபட்டுள்ளோம். இந்தச் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டைத் தடுப்பதற்கு நீதிமன்றம் நல்லதொரு தீர்ப்பை வழங்கும் எனவும் நாம் எதிர்பார்க்கின்றோம்-என்றார். (ம-14,246)

# இடியுடன் மழைக்கு நாட்டில் வாய்ப்பு!

கொழும்பு, ஜூன் 27

நாட்டின் பல பகுதிகளில் மழையும், இடியுடன்கூடிய மழையும் பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் பலதடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# டிப்பர் மோதியதில் இளைஞர் காயம்!

கிளிநொச்சி, ஜூன் 27

டிப்பர் மோதியதில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து பளைப்பகுதியில் நேற்று இடம்பெற்றது.

முகமாலை ஏ-9 வீதியில் வேகமாக வந்த டிப்பர் வாகனம், அதே திசையில் வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் பளை-இந்திராபுரத்தைச் சேர்ந்த 26 வயது இளைஞரே காயமடைந்துள்ளார். காயமடைந்த இளைஞர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-14,9)



# நுண்நிதி டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களின் திசைமுகப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தால் நடத்தப்படும் நுண்நிதி டிப்ளோமா கற்கைநெறியின் ஐந்தாம் அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் அறிமுக நிகழ்வு, திருநெல்வேலி முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் நேற்று இடம்பெற்றது.

ஒரு வருட காலத்தைக் கொண்ட இந்தக் கற்கைநெறிக்கு வங்கித் துறைப் பணியாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், நிதி நிறுவனங்களில் பணி புரிபவர்கள் உள்ளிட்ட பலர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ம-14,27)

# மதுபானங்களின் தரம்; நாடு முழுதும் சோதனை

கொழும்பு, ஜூன் 27

நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபானங்களின் தரம் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ள மதுவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மதுபானங்களின் தரத்தை உரிய வகையில் பேணுமாறு கோபா குழு வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-14,இ)

# பணம் திருடியவர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் மோட்டார் சைக்கிளை உடைத்துப் பணம் திருடியவர் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். மருத்துவமனையில் பணிபுரியும் தாதி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை தனது மோட்டார் சைக்கிளை வாகனத்தரிப்பிடத்தில் நிறுத்தி விட்டுச் சென்று, சிறிதுநேரத்தில் திரும்பிவந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் உடைக்கப்பட்டு 8 ஆயிரத்து 600 ரூபா திருடப்பட்டது என்று தெரியவந்தது.

இதன்போது மோட்டார் சைக்கிளுக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற இளைஞரை அழைத்தபோது இளைஞர் ஓட முயன்றுள்ளார். அவரைப் பொதுமக்கள் மடக்கிப்பிடித்து சோதனையிட்டபோது தாதியரின் பணம் மீட்கப்பட்டது.

இதனையடுத்து தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய பொலிஸார் இளைஞனைக் கைது செய்து அவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ம-14,125)

# நிர்வாகத்தெரிவு

எழுதுமட்டுவாழ் கரம்பகம் பிள்ளையார் கோவில் பரிபாலனசபையின் புதிய நிர்வாகத்தெரிவு கிராம அலுவலர் வி.கலையரசி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

அதற்கமைய, சபையின் தலைவராக கா.அமிர்தலிங்கம், உப தலைவராக ந.காண்டீபன், செயலாளராக து.திரவியநாயகம், உதவிச் செயலாளராக இ.இராஜேஸ்வரி, பொருளாளராக ப.அருணன், நிர்வாக சபை உறுப்பினர்களாக ஏ.சறோஜினிதேவி, செ.செல்வநாயகம், த.கந்தசாமி, க.ஆனந்தரூபன், நா.சச்சிதானந்தம், பொ.நாகதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-14,9)

# முக்கொம்பனுக்கு வாரமொருமுறை நடமாடும் மருத்துவச்சேவை தருக!

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி - முக்கொம்பன் கிராமத்தில் வாரத்தில் ஒரு நாள் நடமாடும் மருத்துவச் சேவை நடத்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த ஓராண்டுக்கும் மேலாக பேருந்துச் சேவைகள் சீரற்ற முறையிலேயே இடம்பெறுகின்றன. அத்துடன் வீதிச் சீரின்மை காரணமாக முக்கொம்பன் கிராமத்திலிருந்து அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு மக்கள் குண்டும் குழியுமான வீதியில் பெரும் நெருக்கடியைச் சந்திக்கின்றனர். அதேபோன்று பூநகரி மருத்துவமனைக்கும் மக்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் வாரத்தில் ஒருநாள் முக்கொம்பன் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவை வழங்குவதன் மூலம் முக்கொம்பனுக்கு அருகில் உள்ள கிராமங்களான கண்ணகை புரம், நேரம்பன், அரசபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களும் பயனடைவர் - என்றனர். (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடி
# அமெரிக்கக் குழு இலங்கை வருகை
## உதவிகள் கிட்டுமா?

கொழும்பு, ஜூன் 27

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக, இலங்கைக்கு வழங்கக்கூடிய உதவிகள் தொடர்பில் பரிசீலிக்கவும் அதுசார் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் திறைசேரி திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்டக் குழுவினர் நேற்றையதினம் இலங்கைக்கு வந்தனர்.

அமெரிக்க திறைசேரியின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதி உதவிச்செயலாளர் றொபேர்ட் கப்றொத் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதி உதவிச்செயலாளர் கெலி கெய்டெலிங் ஆகியோரை உள்ளடக்கிய இந்தக் குழு எதிர்வரும் புதன்கிழமை வரை இலங்கையில் தங்கியிருந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொருளியலாளர்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளது.

இந்தச் சந்திப்புக்களின்போது பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு உதவக்கூடிய வழிமுறைகள், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கையர்கள் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள், எதிர்காலத்தில் நிலைபேறானதும், அனைவரையும் உள்ளடக்கியதுமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பில் பிரதானமாக ஆராயப்படவுள்ளது.

இந்த பயணமானது இலங்கை மக்களின் பாதுகாப்பு மற்றும் சுபீட்சம் ஆகியன தொடர்பில் அமெரிக்கா கொண்டிருக்கும் கடப்பாட்டை மீளவலியுறுத்தும் வகையில் அமைந்திருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

'தற்போது இலங்கையர்கள் அவர்களது வரலாற்றில் மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும், ஜனநாயகக் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதற்குமான எமது உதவிகள் தற்போதைய சூழ்நிலையில் மிகவும் அவசியமானதாக இருக்கின்றது' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

# போசணைக் குறைபாட்டால் சிறுவர் கல்வியறிவு இழப்பு

## மருத்துவர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூன் 27**

**நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் 15 முதல் 20 சதவீதமான சிறுவர்கள் மந்தபோசணையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்களின் கல்வி மட்டம் மற்றும் அறிவு மட்டம் பாதிக்கும் அபாயம் ஏற்படவுள்ளது என விசேட மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையே போசாக்கு தொடர்பான தெளிவின்மை மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் மந்த போசணை மட்டம் அதிகரிக்கின்றது. சிறுவர்களின் வயதுக்கு ஏற்ற நிறை, வயதுக்கு ஏற்ற உயரம் மற்றும் உயரத்துக்கு ஏற்ற நிறை என்பன தொடர்பில் பரிசோதிக்கப்பட்டபோதே இந்த நிலை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்காரணமாக சிறுவர்கள் அடிக்கடி நோய் நிலைமையால் பாதிக்கப்படவுள்ளனர். அத்துடன் அவர்களின் கல்வி மட்டம் மற்றும் அறிவு மட்டம் என்பன பாதிக்கப்படலாம். இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அதிக அவதானம் செலுத்தி உடன் தீர்வுகள் முன்வைக்க வேண்டும் - என்றார். (ச-இ)

# கடனுக்கு பதில் அபிவிருத்திகள்!

கொழும்பு, ஜூன் 27

இலங்கைக்குக் கடனுதவிகளை வழங்குவதற்கு பதில் இந்தியா, இலங்கையில் தனது அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்தவேண்டும் என இந்திய உயர்மட்டக்குழு பரிந்துரைத்துள்ளதாக அறியமுடிகின்றது.

இந்திய உயர்மட்டக்குழு கடந்த வியாழக்கிழமை சில மணிநேர பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்தது. இதன்போதே இந்தியக் குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

மன்னாரில் அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டம், மேற்கு கொள்கலன் முனையம் போன்றவற்றை துரிதப்படுத்துவதற்கான விருப்பத்தை இந்திய உயர்மட்ட குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

எரிபொருளுக்காக இந்தியாவிடமிருந்து மேலும் கடன்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று குறித்த குழு தெரிவித்துள்ளது என்றும், ஒரு பில்லியன் டொலர் நாணய இடமாற்றத்துக்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்றும் அந்தக் குழு மேலும் தெரிவித்துள்ளது என்றும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

# வெல்கம மீது தாக்குதல்: மேலும் ஒருவர் கைதானார்

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை தாக்கிய குற்றச்சாட்டில் மேலுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மே 9 கலவரத்தில், கொட்டாவ மாகும்புர பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம, அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர், சாரதி ஆகியோர் தாக்கப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 7 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14,இ)

# தற்போதைய பொருளாதார நெருக்கடி இன்னும் 7 வருடங்களுக்குத் தொடரும்

கொழும்பு, ஜூன் 27

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இன்னும் 7 வருடங்களுக்குத் தொடரலாம் என பொருளாதார வல்லுநர் பிரியநாத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வரப்போகும் 7 வருடங்களுக்கு இலங்கை கடன் மட்டுமே செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். எனவே பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் அனைவரும் தமது பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-14,இ)

# இலங்கையர்களுக்கு உணவூட்ட ஐக்கிய நாடுகள் சபை தயார்

கொழும்பு, ஜூன் 27

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னணி மனிதாபிமான நிறுவனமான உலக உணவுத் திட்டம் இலங்கையின் உணவு மற்றும் ஊட்டச்சத்து அவசரநிலைமை தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது. இதனடிப்படையில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான திரிபோஷ மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான உணவுத் திட்டம் என்பவற்றை மீண்டும் செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறான தேவையுள்ள 3 மில்லியன் பேருக்கு இந்தத் திட்டத்தை டிசம்பர் வரை செயற்படுத்த 21.6 பில்லியன் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டம் கொழும்பில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு உணவு வவுச்சர்களை வழங்கும் திட்டத்தை கடந்த ஜூன் 16ஆம் திகதி ஆரம்பித்து வைத்தது. இதன்படி ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா மதிப்புள்ள வவுச்சர் வழங்கப்படுகிறது. நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்குக் குறைந்தபட்ச சத்துள்ள உணவை பெறும் பொருட்டு இந்தத்தொகை கணக்கிடப்பட்டுள்ளது. (ம)

# இரட்டைக் குடியுரிமையை கைவிடுகின்றாரா பஸில்?

கொழும்பு, ஜூன் 27

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச, தனது இரட்டைக் குடியுரிமையை இரத்துச் செய்யத் தீர்மானித்துள்ளார் என்று அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிவகிக்கமுடியாது என்ற சரத்து அடங்கிய 21ஆவது அரசமைப்புத் திருத்த வரைவு அமைச்சரவையில் தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டதை அடுத்து, தான் வகித்து வந்த தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து பஸில் ராஜபக்ச விலகினார்.

பஸில் ராஜபக்ச, அமெரிக்கா மற்றும் இலங்கையின் குடியுரிமைகளைக் கொண்டிருப்பதே இதற்குக் காரணம். இந்த நிலையில் அவர் இரட்டைக் குடியுரிமையை இரத்துச் செய்து, இலங்கையில் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடத் தீர்மானித்துள்ளார் என்று பொதுஜன பெரமுனவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைக்குத் தீர்வில்லையேல் விரைவில் வீதிக்கு இறங்குவோம்

## இடதுசாரித் தலைவரான நாணயக்கார எச்சரிக்கை எரிபொருளுக்கு வேறு மார்க்கத்தையும் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 27**

**நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எந்தவிதத் தீர்வையும் முன்வைக்கவில்லை. பிரச்சினைக்குத் தீர்வின்றேல் மக்களுடன் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்குவோம் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில்எவ்விதபிரச்சினையும் இல்லை ஒட்டுமொத்த மக்களும் மகிழ்ச்சியுடன் உள்ளார்கள் என நினைத்துக் கொண்டு ஜனாதிபதியும், பிரதமரும் பொறுப்பற்ற வகையில் உள்ளார்கள். நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்கின்றன.

எரிபொருள் வரிசையில் நிற்பவர்களின் உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலை காணப்படுகிறது. வலுசக்தி அமைச்சர் ருவிற்றர் பக்கத்தில் எரிபொருள் கப்பல் தொடர்பில் செய்திகளை பதிவேற்றம் செய்துகொண்டு இருக்கிறார். எரிபொருள் வரிசையில் நிற்கும் மக்கள் முரண்பட்டுக்கொள்கிறார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது இறுதித் தீர்வு என்ற குறுகிய நிலைப்பாட்டில் இருந்து கொண்டு பிரதமர் செயற்படுகிறார்.

வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ள நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குமா? என்பது சந்தேகத்துக்குரியது. எரிபொருள் விநியோக கட்டமைப்பு முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமை நாட்டின் பிரதான பிரச்சினையாக உள்ளது.

ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வது குறித்து துரிதகரமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் பலமுறை வலியுறுத்தியும் அவர்கள் பொறுப்பற்ற வகையில் அவதானம் செலுத்தாமல் இருப்பது கவலைக்குரியது - என்றார். (ம)

# ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் பெற இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை

## திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு



கொழும்பு; ஜூன் 27

ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் பெற்றுக்கொள்ள இதுவரை எந்த விதத் தீர்மானத்தையும் அரசாங்கம் எடுக்கவில்லை என லங்கா **சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டியுள்ளார்.**

நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் 10 அரசியல் கட்சிகள் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வது குறித்து அரசாங்கத்திடம் முன்வைத்துள்ள கருத்துத் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

சமூக மட்டத்தில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இதுவரை தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை.

மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ளார்கள். எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் தொடர்பான பிரச்சினை நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்கின்றதே தவிர குறைவடையவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் ஒக்ரோபர் மாத காலப்பகுதியில் பெற்றுக் கொள்ள முடியும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் வரை எரிபொருள் வரிசையில் இருந்து பதிவாகும் உயிரிழப்புக்களுக்கு யார் பொறுப்பேற்பது? ஆசிய கண்டத்தில் பெரும்பாலான நாடுகள் ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் எரிபொருளைப் பெற்றுக்கொள்கின்றன. ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடைமுறைக்குச் சாத்தியமான தீர்மானங்களை இதுவரை முன்னெடுக்கவில்லை - என்றார். (ம-14-இ)

# உரிய பொறிமுறையின்றி சுகாதாரத்துறை வீழ்ச்சி!

## அரசிடம் தீர்வில்லை என சஜித் சாட்டை

கொழும்பு, ஜூன் 27

பேரழிவு ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மக்களைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்பை வழங்குபவர்கள் சுகாதார ஊழியர்களே. எனினும் அவர்களுக்கு உரிய முறையில் எரிபொருள் விநியோகிக்கும் திறன்கூட அரசாங்கத்திடம் இல்லை.

இதனால் சுகாதாரத்துறையும் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருடன் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் ஊழலையும் திருட்டையும் உடன் நிறுத்தி சுகாதாரத்துறையைக் கட்டியெழுப்பவேண்டும். சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருளை உரிய முறையில் வழங்காவிடின் சுகாதாரத் துறையும் பின்னடைவைச் சந்திக்கும்.

அத்துடன் நாட்டில் கடுமையான மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. திரிபோஷ தொழிற்சாலை ஏற்கனவே மூடப்பட்டுவிட்டது. தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் ஊட்டச்சத்தை இழந்து வருகின்றனர்.

மருந்துகள் பற்றாக்குறையால் அறுவைசிகிச்சைகள் கூட தடைப்படும் சூழல் மேலெழுந்துள்ளது. நாடு அபாயகரமான படுகுழியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. இந்தப் பேரழிவுக்கு அரசாங்கம் என்ன தீர்வை முன்வைக்கவுள்ளது- என்றார். (ச-இ)

# விலையேற்றத்தால் கடும் அழுத்தங்கள்

கொழும்பு, ஜூன் 27

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாகக் கடும் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதாக முச்சக்கரவண்டிகள் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முச்சக்கரவண்டிகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லலித்தர்மசேகர இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காவிட்டால் பல பிரச்சினைகள் உருவாகும். நீண்ட நேரம் எரிபொருள் வரிசையில் நிற்கவேண்டிய நிலை காரணமாக பல தனிநபர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்களின் நெருக்கடிகள் குறித்து அரசியல்தலைவர்கள் உணர்வற்றவர்களாக உள்ளனர். மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை இழந்துவிட்டனர். எதிர்காலத்தில் நிலைமை மேலும் மோசமடையலாம் - என்றார். (ம)

# எரிபொருளைப் பதுக்கிய 4 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஜூன் 27

எரிபொருளைப் பதுக்கிய குற்றச்சாட்டில் நான்கு சந்தேகநபர்களைப் பதுளை கந்தகெட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்லேவல, பதுளுஓயா, புஸ்ஸகந்த, மிகஹாகிமுல ஆகிய பிரதேசங்களில் எரிபொருளைப் பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த இடங்களில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தபோதே நான்கு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன் கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 332 லீற்றர் டீசல், 53 லீற்றர் பெற்றோல் மற்றும் 237 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன கைப்பற்றப்பட்டன. (ம-14,இ)

# நிரப்பு நிலையத்தில் மோதல்; வாள்வெட்டில் நால்வர் காயம்

கொழும்பு, ஜூன் 27

எரிபொருள் நிரப்பு நிலைய மோதலில் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி நான்கு பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மொனராகலை மாவட்டத்திலுள்ள வெல்லவாய எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை-மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்த நபரொருவர் மொனராகலை மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.


தாக்குதலை மேற்கொண்ட நபர் தப்பிச் சென்றுள்ளார். மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-ய)

# மண்ணெண்ணெய் கோரி வீதிமறியல்

கொழும்பு, ஜூன் 27

மண்ணெண்ணெய் வழங்கக் கோரி ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியை மறித்து பொதுமக்கள் போராட்டம் ஒன்று நேற்று முன்தினம் ஹற்றனில் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாகத் தமக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை எனத் தெரிவித்து அந்தப் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையமொன்றையும் முற்றுகையிட்டு இந்தப் போராட்டம் மக்களால் முன்னெடுக்கப்பட்டது. (ம-14,இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சிந்தனைகள் நேராகட்டும்

'உங்களைச் சுற்றிக் கடன் சூழ்ந்திருந்தால், கடனை எவ்வாறு மீளச் செலுத்திக் கொண்டிருப்பது என்றும் கடன் தவணைகளைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்காமல், புதிதாக இன்னும் பணத்தை எவ்வாறு ஈட்டுவது என்பது பற்றியே நீங்கள் சிந்திக்கவேண்டும்' இவ்வாறு பல்லாயிரம் கோடிகளுக்குச் சொந்தமான அலிபாபா நிறுவனத்தின் ஜக் மா, இளைஞர்களுடனான சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார். இந்தக் கூற்று இலங்கையின் நிகழ்காலப் பொருளாதார நலிவு நிலைக்கும், இலங்கையின் ஆட்சியாளர்களுக்கும் கச்சிதப் பொருத்தம்.

இன்று இலங்கை கடலால் மட்டுமல்ல கடனாலும் நாலாபுறமும் சூழப்பட்டிருக்கின்றது. கடன்களை மீளச் செலுத்துதல் மற்றும் கடன் செலுத்துகைக்கான அவகாசத்தைக் கோருதல் என்றவாறாகத்தான் இலங்கையின் இப்போதைய நாள்கள் நகர்ந்துகொண்டிருக்கின்றன. இன்றைய பொருளாதாரச் சுழற்சி நிலை நீடிக்கும் பட்சத்தில் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு இலங்கை கடனை மட்டுமே மீளச் செலுத்திக் கொண்டிருக்கும். மாறாக அதைத்தாண்டிய பொருளாதார அபிவிருத்தி என்பது துளியும் இருக்காது என்றவாறாக எச்சரித்திருக்கின்றார் பொருளாதார நிபுணர் பிரியநாத் ஜயசூரிய.

உண்மையில் இன்று இலங்கை கடன்கள் மற்றும் கடன் தவணைகள் தொடர்பிலேயே சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அதைத்தாண்டி நாட்டை இந்தச் சிக்கலில் இருந்து மீட்டெடுப்பதற்கான இயலுமை அரசாங்கத்திடம் இல்லை. இதன் விளைவாகத்தான் எரிபொருள் விலையேற்றம் மீண்டும் ஒரு தடவை அப்பாவிப் பொதுமக்களின் முதுகில் ஏறிக் குந்தியிருக்கின்றது. வினைத்திறனற்ற நிர்வாகத்தாலும் தொலைதூர – திட்டமிடலற்ற – ஒதுக்கீடுகளாலும் ஏற்கனவே நொந்து நூலாகிப்போயுள்ள அப்பாவிக் குடிமக்கள் தற்போது இன்னொரு 'சுழற்சி விலையேற்றங்களை' நேற்றுமுதல் கூடுதலாகத் தூக்கிச் சுமக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.


இந்தச் சுழற்சி விலையேற்றங்களுக்கான ஆரம்பப்புள்ளி எரிபொருள்தான். அங்கு ஆரம்பிக்கும் சுமையேற்றம்தான் போக்குவரத்துக் கட்டண உயர்வு, அத்தியாவசியப் பொருள்களுக்கான விலையுயர்வு, உணவுப் பொருள்களின் விலையுயர்வு என்று சுழற்சியான சுமையேற்றங்களுக்குக் காரணமாக இருக்கின்றது; இருக்கவும்போகின்றது. ஆனால், நாட்டின் எரிபொருள் இறக்குமதியை இலங்கை அரசாங்கம் வினைத்திறனாகக் கையாள்கின்றதா? என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில். உலகச் சந்தையின் ஓட்டத்தால் ஏற்படும் கட்டாய விலையேற்றத் திணிப்புகள் இவை அல்ல. இந்த விலையேற்றங்கள் சிந்தனை வறட்சியின் – நாணயப் புரள்வின் – பலவீனத்தையே பறைசாற்றுகின்றன என்பதே இங்கு கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயம்.

இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மெடெரி, 'எரிபொருள் இறக்குமதியில் இலங்கை ஆர்வமின்றி இருக்கின்றது' என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரியிடம் அண்மையில் தெரிவித்திருக்கின்றார். உக்ரைனுடனான மோதல் காரணமாக ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதை அமெரிக்காவோ அல்லது மேற்கத்திய நாடுகளோ விரும்பாது. அவ்வாறு எரிபொருள் வாங்கினால் அது இராஜதந்திரச் சிக்கலுக்குள் சிக்கியதாகிவிடும் என்ற சப்பைக்கட்டு இங்கு தேவையில்லை. ஏனெனில், ரஷ்யாவுக்கு நேரடிப் பொருளாதாரத் தடைகளை விதித்து உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கிய பிரான்ஸ்கூட ரஷ்யாவிடம் இருந்து பல லட்சம் தொன் எரிபொருளை வாங்கிக் குவித்திருக்கின்றது. ரஷ்ய எரிபொருளுக்கு உலக நாடுகளால் ஏற்படுத்தப்பட்ட முடக்கத்தைச் சாதகமாகப் பயன்படுத்திய இந்தியா, இரு தரப்பு ஒப்பந்தத்தின் மூலம் நினைத்துப்பார்க்கக்கூட முடியாத அளவுக்கு மானிய அடிப்படையில் கச்சாய் எண்ணெயை வாங்கிக் குவித்திருக்கின்றது. ஆனால் இலங்கை...?

இலங்கை அரசாங்கத்தின் எரிபொருள் விநியோக ஒப்பந்தங்கள் இந்த நகர்வுக்குத் தடைபோட்டிருக்கலாம் என்பதில் இரண்டாம் கருத்தில்லை. ஆனால், காத்திரமானதொரு முயற்சியை – கனதியான பாத்திரத்தை – இலங்கை மேற்கொள்ளவில்லை என்பது வெளிப்படையானது. இவ்வாறாக பணத்தை ஈட்டுவதற்கு அல்லது வீணான செலவுகளைக் குறைப்பதற்கு அல்லது மலிவான இறக்குமதிகளைப் பெறுவதற்கு எமக்கிருக்கும் அத்தனை கதவுகளையும் அடைத்துவிட்டு கடன்கள் தொடர்பாகவே சிந்தித்துக் கொண்டிருந்தால், கடன் பெருகுமே தவிர குறையாது. எப்போதுமே நேர்மறையாகச் சிந்திப்பதே முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். மாறாக இலங்கை அரசாங்கத்தைப்போல எப்போதும் அபாய அறிவிப்புக்களையே விடுத்துக்கொண்டிருந்தால், நாடும் அதன் பொருளாதாரமும் எதிர்மறைப் பாதைக்குத்தான் செல்லும். முதலில் அரசாங்கம் தன்னுடைய எண்ணத்தை நேர்மறையான திசைக்குத் திருப்பவேண்டும். அல்லாவிடின் தொடர்ச்சியாக நாட்டில் என்னென்னவெல்லாம் இல்லையென்பதையும், என்னென்ன நெருக்கடிகள் வரப்போகின்றன என்பதையும் அறிவிக்கும் ஒரு அபாய எதிர்வு கூறும் அமைப்பாகவே இலங்கையின் அரசாங்கம் மாறிவிடக்கூடும்.

### நாளொரு நல்வார்த்தை

" எங்கு உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகிறதோ அங்கே இறுதியில் உண்மை வெல்லும்" - ஜோர்ஜ் வோஷிங்டன்




#### பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

# தடுப்பில் வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுவிக்குக

### நீதி அமைச்சரிடம் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூன் 27**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள மாணவர் பிரதிநிதிகளை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என நீதியமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றியங்களின் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் மாலை, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தக் கலந்துரையாடலின்போதே, கடந்த 2019 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளரின் விடுதலை தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது.

குறித்த இரு மாணவர் களின் விடுதலை தொடர்பாகவும் விரைவில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நீதி அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அத்துமீறிய கைதுகள் தடுக்கப்படவேண்டும் எனவும், தேசிய ரீதியான நினைவேந்தல்களின்போது மேற்கொள்ளப்படும் புலனாய்வு அச்சுறுத்தல்கள் தடுக்கப்படவேண்டும் எனவும் பொருளாதார நெருக்கடியில் மாணவர்களுக்கு உரிய மகாபொல கொடுப்பனவுகள் உரியதவணையில் வழங்கப்படுவதில்லை. மாணவர்களுக்கு குறித்த கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் மாணவர்களால் வலியுறுத்தப்பட்டது. (ம-125)

# தமது விடுதலையை வலியுறுத்தி தீக்குளித்தவர் ஆபத்தான நிலை

சென்னை, ஜூன் 27

தமிழகம் - திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள், தம்மை விடுதலை செய்யக்கோரி நீண்ட நாளாக போராடிக் கொண்டிருக்கும் நிலையில், மேற்படி விடுதலையை வலியுறுத்தி கடந்த வெள்ளிக்கிழமை தீக்குளித்த நபர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

தமிழகம் - திருச்சி முகாமில் உள்ள 103 ஈழத்தமிழர்கள் தம்மை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி தொடர்ச்சியாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களில் சிலர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளோரின் உடல்நிலை மோசமடைந்து வரும் நிலையில் அவர்களின் விடுதலை தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையிலேயே தமது விடுதலை வலியுறுத்தி நபரொருவர் கடந்த வெள்ளிக்கிழமை தீக்குளித்த நிலையில், அவர் தற்போது ஆபத்தான நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-113)

நாளை 28.06.2022 செவ்வாய்க்கிழமை ஆனி 14
சுபநேரம் : 10.25 - 11.55
ராகுகாலம்: 02.55 - 04.25
அமாவாசை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** செயல்களில் எதிர்பார்த்த நன்மை அடைய முடியாமல் போகும். பணிகளில் தடுமாற்றம் ஏற்படும். நிதானத்துடன் செயற்பட வேண்டும். ஆசைகள் அதிகரிக்கும் என்றாலும் செயல்களில் இழுபறி நிலை ஏற்படும்.

**இடபம்:** ஓய்வு இல்லாமல் உழைப்பீர்கள். பணியிடத்தில் வேலை சுமை அதிகரிக்கும். வரவு வந்தாலும் அதற்கேற்ப செலவு தயாராக இருக்கும். கடன் வாங்கி செலவு செய்வீர்கள்.

**மிதுனம்:** அரசு வழியிலான முயற்சி லாபம் தரும். எதிர்பார்த்தவற்றில் லாபம் காண்பீர்கள். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு நன்மை காண்பீர்கள். நிதி நிலை உயரும்.

**கடகம்:** தொழிலில் இருந்த மந்த நிலை சரியாகும். லாபம் அதிகரிக்கும். புதிய திட்டங்கள் தீட்டி செயற்படுவீர்கள். உங்கள் முயற்சி பலிதமாகும். பணியிடத்தில் இருந்த நெருக்கடி சரியாகும். உபரி வருமானம் ஏற்படும்.

**சிம்மம்:** சங்கடமான நிலை மாறும். உங்கள் அணுகுமுறையால் தொழிலில் லாபம் உண்டாக்கும். நீங்கள் நினைத்த செயலை நிறைவேற்றுவீர்கள். பொருளாதார நிலை உயரும்.

**கன்னி:** கவனத்துடன் செயற்பட வேண்டிய நாள். மற்றவரை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். எதிர்பார்த்த செயலில் பின்னடைவு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உண்டாகும்.

**துலாம்:** எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். உங்கள் முயற்சி பயனளிக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பால் உங்களுடைய எண்ணம் நிறைவேறும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகத்துடன் செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். முன்னேற்றமான நாள். பணியிடத்தில் இருந்து வந்த பிரச்சினை விலகும். உங்கள் செல்வாக்கு உயரும். அனுசரித்துச் சென்று ஆதாயம் காண்பீர்கள்.

**தனுசு:** அவசரம் இல்லாமல் நிதானத்துடன் செயற்படுவதால் நன்மை அதிகரிக்கும். கடுமையான தடைக்கு பின் உங்களுடைய செயலில் வெற்றி காண்பீர்கள். விலகிச் சென்ற உறவுகள் மீண்டும் தேடி வருவார்கள்.

**மகரம்:** மனம் விரும்பும் வகையில் செயற்படுவீர்கள். அரசு வழியில் நன்மையுண்டு. எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்களுடைய எண்ணம் இன்று நிறைவேறும்.

**கும்பம்:** தெளிவுடன் செயற்பட்டு நீங்கள் நினைத்ததைச் சாதிப்பீர்கள். ஆதாயமான நாள். எதிர்பார்ப்பு நிறைவேறும். தடைபட்டிருந்த செயல் முன்னேற்றம் காணும். உங்களுடைய முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் விலகும். உங்கள் செல்வாக்கு உயரும். வார்த்தைகளில் கவனம் தேவை. அனுசரித்துச் செல்வதின் மூலம் நன்மை உண்டு. பிரச்சினையில் இருந்து விடுபடுவீர்கள்.

# அ.தி.மு.கவுக்குள் மீண்டும் உடைவு

## பா.ஜ.க.வில் இணைவாரா ஓ.பன்னீர்செல்வம்?

சென்னை, ஜூன் 27

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் அ.தி.மு.கவிலிருந்து வெளியேறி பா.ஜ.க.வில் சேர முடிவு செய்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அ.தி.மு.க.வில் எழுந்துள்ள ஒற்றைத் தலைமை விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமியின் பக்கம் பெரும்பாலான நிர்வாகிகள் ஆதரவுக்கரம் நீட்டுவதால் எடப்பாடி பழனிசாமியின் கையே ஓங்கியுள்ளது. இதனால் ஓ.பன்னீர்செல்வம் ஓரங்கட்டப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் ஓ. பன்னீர்ச்செல்வம் டெல்லி சென்று பிரதமர் மோடியை சந்திப்பதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளார். இதேவேளை ஓ.பன்னீர்செல்வம், சசிகலா தரப்பினருடனும் இரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பழனிசாமியை வீழ்த்துவதற்கு சசிகலாவுடன் கைகோர்க்கவும் ஓ.பன்னீர்செல்வம் தயாராகி வருகிறார் எனக் கூறப்படுகிறது. எடப்பாடி பழனிசாமி - ஓ.பன்னீர்செல்வம் இடையேயான மோதல் முற்றியுள்ளதை தொடர்ந்து அ.தி.மு.க. மீண்டும் உடையும் அபாயமும் ஏற்பட்டுள்ளது என அரசியல் அவதானிகளால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# உணவுத் தட்டுப்பாட்டால் பேரழிவின் விளிம்பில் உலகம்

## ஐ.நா. பொதுச் செயலாளர் வேதனை

பெர்லின், ஜூன் 27

உலக நாடுகளிடையே விரைவில் ஏற்படவுள்ள உணவுத் தட்டுப்பாட்டால் உலகம் பேரழிவைச் சந்திக்கவுள்ளது. அதன் பின் விளைவுகளில் எந்த நாடும் தப்ப முடியாது என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார். ஜேர்மன் தலைநகர் பேர்லினில் பணக்கார மற்றும் வளரும் நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பருவநிலை மாற்றம், கொரோனா ஆகியயவை முன்னெப்போதும் இல்லாத அளவு உலக நாடுகளிடையே தாக்கத்தை உண்டாக்கியுள்ளன. இதனால் முன்னெப்போதுமில்லாதளவு பட்டினிச்சாவை கோடிக்கணக்கானோர் எதிர்கொள்ளவுள்ளனர். அத்துடன் உக்ரைன் போர் இந்த நிலைமையை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

ஆசிய, ஆபிரிக்கா, அமெரிக்க நாடுகளில் உரம், எரிசக்தி விலை உயர்வை சமாளிக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர். பல நாடுகளில் பஞ்சம் அறிவிக்கப்படும் அபாயம் உள்ளது. அடுத்த ஆண்டு நிலைமை இன்னும் மோசமடையும். எந்த நாடும் அதன் சமூக, பொருளாதார பின் விளைவுகளில் இருந்து தப்ப முடியாது. இதனை சமாளிக்க ஐ.நா அதிகாரிகள் சமாதான உடன்படிக்கை மேற்கொண்டுவருகின்றனர். உக்ரைன் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டும். உலக சந்தைக்கு ரஷ்யா எந்தக் கட்டுப்பாடுமின்றி உணவு, உரம் ஆகியவற்றை கொண்டுவர வேண்டும். உலக உணவுச் சந்தையை ஸ்திரப்படுத்த தனியார்துறை உதவ வேண்டும்- என்றார். (ச-இ)

## நோர்வேயில் துப்பாக்கிச்சூடு

# இருவர் சாவு


ஒஸ்லோ, ஜூன் 27

நோர்வேயில் இரவுநேர கேளிக்கை விடுதி யில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 02 . 1938

மறைவு 26 . 06 . 2022



## திரு.சின்னத்தம்பி கந்தசாமி

நயினாதீவை பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் நயினாதீவை வதிவிடமாகவும் கொண்ட திரு.சின்னத்தம்பி கந்தசாமி அவர்கள் (26.06.2022) அன்று நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி கண்மணி தம்பதியின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் இலட்சுமி தம்பதியின் அன்பு மருமகனும் ஞானசோதியின் அன்பு கணவரும் சிவராம், ஸ்ரீராம், சுபா, ஷகிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேமலதா, சிவாஜினி, வாமதேவா ஆகியோரின் பாசமிகு மாமாவும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, வீரவாகு, நடராசா மற்றும் மாணிக்கம், சுந்தரம்பிள்ளை, இரத்தினசபாபதி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான வீரவாகு, கனகசுந்தரம், பரமலிங்கம், புனிதவதி மற்றும் தனரெத்தினபூபதி, புஸ்பராணி, பூலோகசுந்தரி, காலஞ்சென்றவர்களான அரியபுத்திரர், நாகம்மா, கந்தையா, கதிர்காமநாதன் மற்றும் நீலாம்பிகை, கமலாதேவி, நிர்மலா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சற்குணம், நாகமுத்து, சதாசிவம் மற்றும் பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற முருகநாதன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் சிவிதா, ஞானுஷா, கிசோன்.ஹரிக்ஷன், சுவாதி, சுருதி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.06.2022 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சரசாலை குருவிக்காட்டின் சமநிலைத்தன்மை அழிப்பு

## காரணமானவர்கள் மீது நடவடிக்கை என்று வனவளப்பாதுகாப்புத் திணைக்களம் தெரிவிப்பு




**யாழ்ப்பாணம், ஜூன் 27**

**சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சரசாலைப் பகுதியில் அமைந்துள்ள, சரசாலை குருவிக் காட்டின் சமநிலைத்தன்மையை சிலர் சீரழித்து வருகின்றனர். இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தத் திணைக் களம் மேலும் தெரிவித்ததாவது:- சரசாலை குருவி காட்டுப்பகுதியில் அனுமதியற்ற முறையில் உள் நுழைவு, கண்டல் தாவரங்களை மீன்பிடி நடவடிக்கைகளுக்காக வெட்டுதல், விறகுகளுக்காக வெட்டுதல், தனியார் மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகள் கொட்டப்படுதல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. அத்துடன் சரசாலை கடற்பகுதியில் உள்ள வெள்ளைப் பாறைக்கற்கள் சட்ட விரோதமான முறையில் உடைத்து அகற்றிச் செல்லப்படுகின்றன.

இந்தச் செயற்பாடுகளால் குறித்த பகுதியில் இயற்கைச் சமநிலை முற்றாகப் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பறவைகளின் வரவும் இல்லாது போகும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே இயற்கையின் கொடையாகவும் பறவையினங்களின் சரணாலயங்களாகவும் காணப்படுகின்ற சரசாலை குருவி காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என்று தெரிவித்துள்ளது. (ம-125)



## கர்ப்பிணிப் பெண்களுக்கு உலர் உணவுப் பொதிகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

பொருண்மியம் நலிந்த தெரிவுசெய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் ஆவரங்கால் பகுதியில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. 52 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில், கனடாவைச் சேர்ந்த வர்த்தகர் ரஜிகரன் சண்முகரத்தினத்தின் நிதிப்பங்களிப்பில் இந்த உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.ஸ்ரீ, 52ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சஞ்சீவ பெர்னாண்டோ, 521 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மகேன் தல்லத்துவ ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14,20)

## பூநகரி - கறுக்காய்தீவு ஊடாக பஸ் சேவையை ஈடுபடுத்துங்கள்

கிளிநொச்சி, ஜூன் 27

பூநகரி - கறுக்காய்தீவு கிராமம் ஊடாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்தை சேவையில் ஈடுபடுத்துமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி முகாமையாளருக்கு, பூநகரி பிரதேசசபையால் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து பூநகரி வரை சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள், பூநகரியில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கறுக்காய்தீவு கிராமம் வரையும் நாகதேவன்துறை ஊடாக கறுக்காய் தீவுக்கும் கறுக்காய்தீவு கிராமத்தில் இருந்து வாடியடி வரையும் சேவையில் ஈடுபடவேண்டும்.

குறித்த கிராமங்கள் ஊடாக பேருந்துச் சேவை ஈடுபட்டால் ஞானிமடம், கறுக்காய்தீவு பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்லமுடியும்.

இதேவேளை பூநகரி - கௌதாரிமுனை, பள்ளிக்குடா, செம்மண்குன்று ஆகிய கிராமங்களுக்கும் பேருந்துச்சேவை ஈடுபடவேண்டும் என்பது அந்தப் பகுதி கிராம மக்களின் நீண்ட கால கோரிக்கையாகும் என்றும் அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,13)



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். (ச-125)

## வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிப்பதற்கு நல்லூர்ப் பிரதேசசபையால் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 27

நல்லூர்ப் பிரதேசசபையின் பிரிவுக்குபட்ட வட்டாரங்களிடையே வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிப்பதற்கான போட்டிகள் நல்லூர் பிரதேசசபையின் தவிசாளர் மயூரன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது நல்லூர் பிரதேசசபை பிரிவுக்குட்பட்ட 12 வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் 10 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு 120 பேருக்கு இலவச வித்துக்கள் மற்றும் சேதனப்பசளையும் வழங்கப்பட்டன. இவற்றின் மூலம் சிறப்பான வெளியீட்டை காட்டும் பயனாளிகளில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடத்தைப் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் மற்றும் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பயனாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும் எனவும் வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடுவோருக்கு ஒருகிலோ சேதனப் பசளையை 15 ரூபா வீதம் நல்லூர்ப் பிரதேசசபையில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார். (ச-125)

*பொருளாதார நெருக்கடியால்*

## மந்த கதியிலேயே குளங்கள் சீரமைப்பு

முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தற்போது தாமதமடைந்துள்ளன என அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் பிரதான குளமான முத்தையன் கட்டுக் குளத்தின் கீழுள்ள அனைத்து வாய்க்கால்களும் உலக வங்கியின் நிதியுதவியில் சீரமைக்கப்பட்டு வருகின்றன. எனினும் பொருள்கள் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் நெருக்கடியால் இந்தப் புனரமைப்புப் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன.

உரிய காலத்தில் முடிக்க வேண்டிய இந்தத் திட்டங்கள் முடிக்கப்படாமையால் ஏனைய குளங்களில் முன்னெடுக்கப்படவேண்டிய வேலைத்திட்டங்களும் தாமதமடைந்துள்ளன. (ச-13)



## பல்கலைக்குத் தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 27

2020 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வரணி மத்திய கல்லூரியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


























## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

உரும்பிராய்- மனோன்மணி சமேத சிவமகேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றது.

தொடர்ந்து 24 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (ம-14)


## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

உரும்பிராய் - ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தங்கரதமும் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 13ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14)





வரணி - சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய தீர்த்தத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பக்தர்கள் சூழ இடம்பெற்றது. (ச-159)

ஆசிரியருக்கான கடிதம்

## பகவான் புத்தரும் ஓர் இனவாதியா?

சித்தார்த்த அரசகுமாரன் தன் தந்தையின் ஆட்சியில் மக்கள் துன்பப்படுகிறார்கள்- துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற சிந்தனையில்தான் இளம் கர்ப்பிணி மனைவியையும் கைவிட்டு துறவறம் பூண்டார். அவர் தழுவிய புத்த மதத்தின் பெயரால், இலங்கை உள்ளிட்ட புத்த மதம் சார் நாடுகளில் அவரின் தந்தையின் ஆட்சிக்காலத்தில் நடந்ததை விடப் பஞ்சமா பாதகங்கள் அத்தனையும் நடந்து வருகின்றன.

இன்றைய நிலையில் இலங்கையில் அடுத்த நேர உணவுக்கு என்ன செய்வது? என்று மக்கள் கைகளைப் பிசைந்து கொண்டிருக்கும் வேளையில் குருந்தூர் மலையில் பௌத்த ஆலயம் அமைத்தல், புத்தர் சிலை வைப்பு என்ற அரசாங்கத்தின் அடாவடித்தனம் நீள்கின்றது. நீதியையோ, நீதிமன்றத்தையோ இந்த அடாவடிகள் மதிப்பதாக இல்லை.

இதற்குப் பின்புலத்தில் தொல்லியல் திணைக்களம், வனப்பாதுகாப்புத் திணைக்களம், வேறு வேலையற்ற படையினர், ஆளுநர், இன்னும் சில தமிழ் மாபியாக்கள் இதற்குத் துணைபோகின்றார்கள்.

பட்டினியால் வாடும் மக்களின் பசிபோக்க மரவள்ளித் தடி தேடிக்கொண்டிருக்கும் நிலையில் இவர்களின் செயல் புத்தசமயத்தைக் கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்குகின்றது. உருப்படுமா இந்த நாடு? இற்றைக்கு 62 வருடத்துக்கு முன் சோமராமதேரர், சொன்னார் புத்தமதம் பொய் மதம் என்று அவர் சொன்ன சொல் நூறு வீதம் உண்மையாகவே தெரிகிறது.

மக்களின் பசியைவிட பதவிகளை மேலாக மதிக்கும் இனவாதிகளாலும் மதவாதிகளாலும் நாடு அழிவை நோக்கிச் செல்வதைத் தவிர்க்க முடியாது. இறைவன் தான் மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

ப.யேசுபாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபயவின் அதிகாரம் குறைக்கப்படுதல் வேண்டும்

## அவர் ஆட்சியின் பின்னரான அதிகாரக்குறைப்பு வெறும் கண்துடைப்பு என்கின்றார் இந்துனில்

**கொழும்பு, ஜூன் 27**

**ஜனாதிபதி கோத்தாபயவிடம் தற்போதுள்ள அதிகாரங்கள்தான் மிகவும் அபாயகரமானவையாக இருக்கின்றன. அவரின் ஆட்சிக்காலம் முடிவடைந்த பின்னர் அடுத்ததாக வரும் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதென்றால் அதனால் எவருக்கு என்ன பயன்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

தற்போது அரசமைப்புக்கான 21ஆவது திருத்தம் பற்றிப் பேசப்பட்டு வருகின்றது. நாம் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஜனநாயக அம்சங்களையும், அதற்கு அப்பால் ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் குறைப்பதற்கான சரத்துக் களையும் உள்ளடக்கிய திருத்த மொன்றை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஊடாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தோம்.

ஆனால் அரசாங்கம் சமர்ப்பித்துள்ள திருத்தம் ஜனநாயகத்துக்குப் பயனளிக்காத சரத்துக்களையே உள்ளடக்கியிருப்பதுடன் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பாதுகாக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

அவருடைய அதிகாரங்கள் இந்தத் தவணையில் இல்லாமல் அடுத்த தவணையிலேயே குறைக்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறிருக்கையில் கோத்தாபயவின் பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர்தான் 21ஆவது திருத்தம் நடைமுறைக்குவரும் என்றால், இதனை என்ன தேவைக்காகக் கொண்டுவருகின்றார்கள் எனத் தெரியவில்லை - என்றார். (ம-ய)

# போக்குவரத்துச் சபைக்கு மேலதிகமாக ஊழியர்கள்

## கோப் குழு கண்டறிவு

கொழும்பு, ஜூன் 27

கடந்த நல்லாட்சி காலத்தில் இலங்கை போக்குவரத்து சபையில் மேலதிகமாக பலருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளமை கோப் குழு விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 2017ஆம் ஆண்டளவில் இலங்கை போக்குவரத்து சபையின் அனுமதிக்கப்பட்ட ஊழியர் அளவை மிஞ்சும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 17ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கான ஊழியர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்து 886 என வரையறுக்கப்பட்டுள்ளது.

எனினும் தற்போதைக்கு அதன் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 656ஆக இருக்கின்றது. அதன் மூலம் 2 ஆயிரத்து 770 ஊழியர்கள் மேலதிகமாக சேவைக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து சபையின் மேலதிக ஊழியர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, ஊழியர்களின் எண்ணிக்கையை அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கு குறைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோப் குழு பரிந்துரைத்துள்ளது. (எ-14-இ)

# மூடப்படுகின்றன 70வீதமான எரிபொருள் நிலையங்கள்

கொழும்பு, ஜூன் 27

தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடளாவிய ரீதியில் 70 சதவீத எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

30 நாள்களுக்கு முன்னரே முற்பதிவு செய்த போதிலும், போதியளவு எரிபொருள் இன்னும் கிடைக்கவில்லை என சங்கத்தின் தலைவர் டபிள்யூ.எஸ்.எஸ். பெர்னாண்டோ தெரிவித்தார்.

சிறுதொகை எரிபொருளே விநியோகிக்கப்பட்டுள்ளதால், 20 வீதமானோருக்குக் கூட எரிபொருளை விநியோகிக்க முடியாதுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பாதுகாப்புக்கு பொலிஸ் பாதுகாப்பு போதுமானதாக இல்லாததால், இராணுவ பாதுகாப்பை வழங்க வேண்டும்என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-இ)



# அதிகரிக்கும் வரிசையுகத்தை இல்லாதொழிக்க '21' தேவை

## ஓமல்பே சோபித தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

சிறிலங்காவில் நாளுக்குநாள் அதிகரித்துவரும் வரிசைகளை இல்லாதொழிக்க அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை விரைவில் நடைமுறைப்படுத்தல் அவசியம் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரிசையில் காத்திருக்கும் ஒவ்வொரு விநாடியும் மக்கள் மனங்களில் கோபமும் விரக்தியும் அதிகரிக்கின்றது. வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாமல் லட்சக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர்.

21 ஆவது திருத்தச் சட்டத்தை எவ்வாறு உண்பது எனப் பலரும் கேட்கின்றனர். அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு 21ஆவது அரசமைப்பு திருத்தம் அவசியம். அரசியல் உறுதித்தன்மை ஏற்பட்டால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும். இதனூடாகவே நாட்டில் வரிசைகளை இல்லாதொழிக்க முடியும் -என்றார். (ச-22)

# மாளிகையின் கதவுகளை உடைத்து கோத்தாவை வெளியேற்ற வேண்டும்

## மேர்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

ஜனாதிபதி மாளிகையின் கதவுகளை உடைத்து ஜனாதிபதியின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளவேண்டும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

காலிமுகத்திடலில் கடந்த மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைக் கலவரத்தின் பிரதானியாகச் செயற்பட்டவர் கோத்தாபய ராஜபக்ச. கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக எவ்வளவு எதிர்ப்புகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தாலும் ஜனாதிபதி ஒருபோதும் பதவிவிலகப் போவதில்லை. எனவே ஜனாதிபதி மாளிகையின் கதவுகளை உடைத்து ஜனாதிபதியின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளவேண்டும்.

இதேவேளை- தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மறைத்து வைத்திருந்த தங்க நகைகள், சொத்துக்களையும் ராஜபக்சக்களே களவாடிச் சென்று சொத்துக்களைச் சேகரித்துள்ளனர்- என்றார். (ம-14,இ)

# கோத்தா பதவியில் தொடர்ந்தால் சர்வதேச உதவிகள் கிடைக்காது

## தயான் ஜயதிலக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 27

நாட்டின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியில் தொடர்ந்தால், சர்வதேச உதவிகள் இலங்கைக்குக் கிடைக்காது என்று இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

இந்தியாவினால் இலங்கையைத்தொடர்ந்து தோளில் சுமந்துகொண்டு செல்ல முடியாது என்றும் ஒட்டுமொத்த சர்வதேச தரப்பினதும் ஒத்துழைப்புக்களின் மூலமே இலங்கையால் நெருக்கடிகளிலிருந்து மீளமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு மிகமோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமைகளில் இருந்து மீள்வதாக இருந்தால் முதலில் சர்வதேசத்தின் ஒட்டுமொத்தமான ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், அதற்கு தற்போதுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சதான் பெரும் தடையாகவுள்ளார்.

குறிப்பாக கூறுவதனால், நாட்டின் பொருளாதார நெருக்கடியானது, நபர் ஒருவரால் ஏற்படுத்தப்பட்டது என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா சுட்டிக்காட்டியுள்ளார். அந்த ஆழமான கூற்று, ஆட்சி அதிகாரத்தில் உள்ள நபரின் தவறான, தாமதமான தீர்மானங்கள் நாட்டில் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளன என்பதையே வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன், குறித்த நபரும் தான் தவறான தீர்மானங்களை எடுத்துள்ளதாக பகிரங்கமாகவே ஒத்துக்கொண்டும் உள்ளார். அவ்விதமான ஒருவர் பதவியில் இருக்கின்றபோது சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்கள் எவ்வாறு உதவிகளை வழங்கும்?

அடுத்து, அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் கோத்தாபயவை எதேச்சாதிகாரத் தலைவர் என்றே கருதுகின்றன. அதற்கு அவரது காலத்தில் இடம்பெற்ற ஜனநாயக விரோதச்செயற்பாடுகள் அடிப்படையாகின்றன. அவ்விதமான நிலைப்பாட்டில் உள்ள சர்வதேச நாடுகள் எவ்வாறு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் -என்றார். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜனநாயக உரிமைகளை ஹொங்கொங் வெல்லட்டும்

■ ஆர்.பிரகாஷ்

தன் மீதான சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிரான ஹொங்கொங்கின் போராட்டம் மீண்டும் தோற்றம் பெற்றுள்ளது. இந்தப் போராட்டம் அடுத்தடுத்த நாள்களில் அதிதீவிரமாக மாறக்கூடிய அத்தனை ஏதுநிலைகளும் தற்போது ஹொங்கொங்கில் தென்பட ஆரம்பித்துள்ளன. சீனா. ஹொங்கொங்கை 'வலிந்து' பொறுப்பேற்றுக்கொண்ட 25ஆவது




ஆண்டு நிறைவை முன்னிட்ட கொண்டாட்டங்கள் சீனாவில் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சீன ஜனாதிபதி ஜின் பிங்கின் தலைமையில் இந்தக் கொண்டாட்டங்களுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியிலேயே ஒருவிதமான பதற்றத்துக்குள் ஹொங்கொங் தள்ளப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டில் ஹொங்கொங் நாட்டின் அனைத்து மக்களும் ஓரணியில் திரண்டு, தாய் நிலப் பகுதியான சீனாவின் மறைமுகக் கட்டுப்பாடுகளை ஏற்க மறுத்து, முழு ஜனநாயக உரிமைகளைக் கோரி மூன்று மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து மேற்கொண்ட போராட்டத்தை ஒத்ததான போராட்டம் அங்கு வெடிக்கலாம் என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### கிளர்ச்சியாளர்களின் கோரிக்கைகள் சில

சீன எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்கள் ஹொங்கொங்கில் சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிராகப் பல கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடுகின்றனர். இதில் முக்கியமானது சீனத்துவத்துக்கு வாலாட்டும் தலைமைகளை அல்லாமல், தமது தலைமை நிர்வாகியைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை அனைவருக்கும் வேண்டுமென்று கிளர்ச்சியாளர்கள் கோருகின்றனர். 'ஒரே நாடு இரண்டு நிர்வாக அமைப்பு' என்ற சீனக் கொள்கையை ஏற்க மறுக்கின்றனர். முன்பு இருந்ததுபோல் 'தீவு நாடாக' இருந்த நிலையே நீடிக்க வேண்டும், அரசியல் உரிமைகள் எந்த வகையிலும் குறைக்கப்படக்கூடாது என்று வலியுறுத்துகின்றனர். கிளர்ச்சிக்காரர்களின் கோரிக்கைகளையும் ஏற்க முடியாமல், தாய் நிலப் பகுதியான சீன ஆட்சியாளர்கள் சொல்லும்படி அடக்குமுறைகளைக் கையாளவும் தெரியாமல் சீனத்துவத்துக்கு விசுவாசம் காட்டும் ஹொங்கொங் தலைமைகள் திணறவே செய்கின்றன. ஹொங்கொங் இளைஞர்கள் தாங்கள் நடத்தும் ஜனநாயகப் போராட்டத்தையும் தங்கள் கோரிக்கைகளையும் 'தண்ணீர் புரட்சி' என்கின்றனர். இந்தக் கிளர்ச்சிக்கு 'தலைவர்' என்று யாரும் கிடையாது. ஆங்காங்கே கும்பலில் இருப்பவர்களிலேயே ஒருவர், அடுத்தது என்ன என்று தீர்மானித்து வழிநடத்துகிறார்.


### சீன ஆதரவாளர்களின் அத்துமீறல் அதிகரிப்பு

இதற்கிடையில், ஹொங்கொங்கின் வடக்கு முனையில் ஜனநாயக ஆதரவாளர்களுக்கும் சீனாவின் பூஜியான் மாநிலத்திலிருந்து வந்து குடியேறியவர்களுக்கும் இடையில் கருத்து மோதல்கள் வலுவாகவே நிகழ்கின்றன. ஜனநாயக ஆதரவாளர்களைக் கரப்பான்பூச்சிகள் என்று சீனாவிலிருந்து வந்தவர்கள் வசைபாடுவதும் நடந்தேறுகிறது.

2047ஆம் ஆண்டில் ஹொங்கொங்குக்கு இப்போதுள்ள தனி அந்தஸ்தும் போய்விடும். பிறகு, அது சீன நாட்டின் அதிகாரபூர்வ பகுதியாகிவிடும். ஹொங்கொங்கர்கள் விரும்புகின்ற வகையில் முழு ஜனநாயக உரிமைகளைத் தருவதற்கு சீனா சம்மதிக்காது. சம்மதித்தால், தாய்வானும் இதே பாணியில் கிளர்ச்சியில் இறங்கலாம்.

பொருளாதாரம், தொழில்நுட்பம், இராணுவ உத்தி ஆகியவற்றில் சீனாவின் ஆதிக்கத்தை உலகில் நிலைநாட்ட ஜனாதிபதி ஜி ஜின்பிங் தொடர் நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்.

இந்த நிலையில், ஹொங்கொங்கில் அரசு எதிர்ப்புக் கிளர்ச்சி நீடிப்பது சீனாவுக்குப் பின்னடைவையே ஏற்படுத்தும். எனவே, விரைந்து சமரசத் தீர்வு காண்பது சீனா, ஹொங்கொங் இரண்டின் எதிர்காலத்துக்கும் நல்லது. ஜனநாயகத்துக்கான இந்தப் போராட்டத்தின் இறுதியில் ஹொங்கொங் மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்கட்டும்! ■



யாழ். மாவட்டத்தில் மகளிருக்கான பிறீமியர் லீக் போட்டி அரியாலை காந்தி விளையாட்டுக் கழகத்தால் இந்த வருடம் முதன்முறையாக முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் கலந்துகொண்டார். (ச)

## நகைகளுடன் பெண் கைது!

சுமார் ஒரு கோடியே 10 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற பெண் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்கப்பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு-வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இதன்போது பெண்ணிடம் 650 கிராம் தங்க நகைகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14,இ)





தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 22 மாணவர்களுக்கு சைக்கிள்களும் 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளும் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்று வழங்கப்பட்டன. தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர் நாட்டில் வசிக்கும் ஒருவர் தனது தாயாரின் 76ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த உதவிகளை வழங்கினார். (ம-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 . 06 . 1935

மறைவு 28 . 05 . 2022



அமரர்

## சுந்தரலிங்கம் சிதம்பரேஸ்வரி

சீரமேவும் இணுவைநகர் மஞ்சத்தடியிலே
சித்திரமாய் வாழ்ந்த சீமாட்டியே
பேராயிரவர் வழிவந்த பேறதனால்
பாருக்குள் புண்ணியமானார்
நேரான சுந்தரலிங்கம் குடும்ப விளக்காய்
நியம கலை சிதம்பரேஸ்வரி தாயே!
ஊரார் வணங்கும் உயர்பேறடைந்தார்
உள்ளபடி முப்பத்தொன்றில் பிரார்த்திக்கின்றோம்.

இராச சௌந்தர்யம்
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.

குடும்பத்தினர்

cs 45352 (2.6)

# மரண அறிவித்தல்



## திருமதி இராமநாதன் கண்மணியம்மா

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா ரொரண்டோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் கண்மணியம்மா நேற்று முன்தினம் (25.06.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் மனைவியும், விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, சுமதி, நிர்மலா, முருகானந்தன், குகானந்தன், பரங்குன்றன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வாசுகி, நாகநாதன், ஜெயவிந்தன் உமாநிதி, தர்சிகா, வர்மிலா ஆகியோரின் பாசமிகு மாமியும், விகிர்தன்,அபிஷா, அணுயிந், நியாணி, சணோயன், ஆருசன், ஆதீசன், ஆயிசன், அதுசன், அதுஷனா, சதுசன், கிருசன், அச்சயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2022) திங்கட்கிழமை கனடா ரொரண்டோவில் கனடா நேரம் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் - விக்கினேஸ்வரன்
+ 94(77) 400 3237

இணுவில் மேற்கு,
இணுவில்.

# நீங்காத நினைவலைகளில் 13 ஆண்டுகள்



மலர்வு 18.07.1930



உதிர்வு 22.06.2009

## அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

(Retired MSO Jaffna Post Office)

திதி: சதுர்த்தசி - 27.06.2022 திங்கட்கிழமை

**அப்பா உங்கள்**
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த **அமரர் சுப்பிரமணியம் நாகராஜா** அவர்களது ஆத்ம சாந்திக்காக **இன்று (27.06.2022) திங்கட்கிழமை கைதடி வீரகத்திப் பிள்ளையார் சிவன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று, தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லம், கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, சுன்னாகம் வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக முதியோர் இல்லம், புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு விசேட உணவு உபசாரமும், 30.06.2022 வியாழக்கிழமை அன்று நாவற்குழி சிவதெட்சனாமூர்த்தி திருக்கோவில் திருவாசக மண்டபத்திலும், 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கீரிமலை சிவபூமி மடத்திலும் அன்னதானம் வழங்கப்படும்.**

மகன் : நாகராஜா விஜயகுமார்
(சங்கர்- சுவிஸ்)

தகவல்:
குடும்பத்தினர் சார்பாக

cs 45319 (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




OFFGRID SOLUTIONS

Our Offer
- Capacities - 3&5 kVA
- Scalable storage capacities
- VRLA Batteries or Lithium Phosphate cells, which deliver greater performance,safety and lifespan

HYBRID SOLUTIONS

Our Offer
- Scalable storage capacities
- A modular design which consists of a power module and one or more battery modules
- Compatible with single and three phase inverters

Daytime Zero Bill | Noise Free | Eco - Friendly | No Gas / Fuel Requird | Zero Maintenance

6000 LifePo4 solis FOX JA SOLAR

218, Hospital Road, Jaffna.
021 222 5893, 077 396 3280, 077 742 5973, 077 396 3284
Head Office : 115C, W.A. Silva Mw, Colombo - 06 011 401 3235
www.solarpowerlk.com MicroPcSystemsPvtLtd
Colombo : 077 301 3043 / 071 396 3281
Batticaloa : 071 035 6072 / 071 035 6069
Vavuniya : 077 396 3278 / 077 776 3071
Kilinochchi : 077 742 5973, 077 396 3280

மின்சாரம் இல்லையா ?
எரிபொருள் இல்லையா ?
சூரியஒளி மூலம் இயங்கும் நீர்ப்பம்பிகள்
தடையில்லா விவசாயம்
0.5 Hp - 6 Hp வரையான தீர்வுகள்
2Hp & 2 inch (300L / Min) ரூ 550,000 இல் இருந்து




# வன்புணர்வின் பின்னரே மூதாட்டி கழுத்தறுத்துக் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 27

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் வீட்டில் தனிமையில் வாழ்ந்த மூதாட்டி கொடுமையாக வன்புணர்வுக்கு உட்படுத்திய பின் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை மூதாட்டி கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். சாணை தவமணி (வயது-78) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டார்.

மூதாட்டியின் சடலம் யாழ்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

மூதாட்டி கொடுமையாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் தொடர்பில் ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் விரைவில் கைது செய்யப்படுவார் என்று பொலிஸார் கூறினர்.

(ஒ-26)

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி




திருமதி
பொன்ரதம் (சுமங்கலி) விவேகானந்தன்
27.06.2022

ஆண்டுகள் பன்னிரண்டு
- ஓடி மறைந்துவிட்டன
ஆனாலும் உங்கள் நினைவு
எப்பவும் எங்களை வாட்டுகின்றது
உங்கள் நல்ல குணங்களை மறக்க
- முடியவில்லை
உங்களை நினைத்து தினமும்
- கலங்குகின்றோம்.

கணவர்: தி.விவேகானந்தன்
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், சித்தி,
மருமகள்: அபியா,
பெறாமக்கள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 01 . 1984



மறைவு 25 . 06 . 2022

### அமரர் சுந்தரராஜன் ராதாகிருஸ்ணா

(காப்புறுதி ஆலோசகர் ஆயுட்காப்பீட்டு கூட்டுத்தாபனம் சுன்னாகம் கிளை LIC)

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுந்தரராஜன் ராதாகிருஸ்ணா நேற்றுமுன்தினம் (25.06.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரராஜன் வடிவாம்பிகை தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், இராஜகோபாலன் சந்திரகுமாரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஷர்மிலாவின் (உதவித் தபாலதிபர் - யாழ்ப்பாணம்), அன்புக் கணவரும், கபிஷனா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி - தரம் 8) பதுஷிகா (யா/ மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம் - தரம் 3), நிகாரிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரமணன் (கனடா), தனா (பிரான்ஸ்), கல்பனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருபாலினி (கனடா), ஜெகதீபன் (பிரான்ஸ்), ஜெரோசன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்), சசீந்திரன் (கட்டடங்கள் திணைக்களம் வ.மா), சிந்தோசன், கோபிஷன் (யா/ மத்திய கல்லூரி - தரம் 11) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஜித், சங்கித், நிவேதிகா (கனடா) ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், காவியா, ஆரபி, சிவானி, சபரீசன் (பிரான்ஸ்), சஸ்மிகா (யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம் - தரம் 4) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 224 7705 , 077 998 2019

(2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 09 . 1961



இறப்பு 23 . 06 . 2022

### அமரர் நடேசபிள்ளை மணிசேகரம் (மணி)

யாழ்ப்பாணம்-சங்குவேலி வடக்கு, மானிப்பாயை வதிவிடமாகக் கொண்ட நடேசபிள்ளை மணிசேகரம் அவர்கள் கடந்த வியாழக்கிழமை (23.06.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசபிள்ளை மற்றும் திலகவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிங்கராஜா மற்றும் நேசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் டெபோரா சியாமிளியின் பாசமிகு கணவரும் கம்சாநந்தினி (ஆசிரியர் - உடுவில் மகளிர் கல்லூரி), டிலக்ஷன் ஆகியோரின் அன்புத்தந்தையும், கௌரி-நவம் (லண்டன்), சாமிளா (சுவிஸ்), பங்கயச்செல்வி-லோரன்ஸ், செந்தில்வேல்-சுரேந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜன்-கிளேரா, ராஜி-கிருபானந்தன் (கனடா), கெல்வின்-ரோஹினி (நோர்வே), ராஜ்-தயாளினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பிரதீபன், அஜந்தன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று திங்கட்கிழமை (27.06.2022) முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று பிற்பகல் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின்போதே அமைச்சர் காஞ்சன மேற்படி தகவலை வெளியிட்டார்.

இந்த நடைமுறை குறித்து விளக்கமளித்த அமைச்சர்,

எரிபொருள் பெறுவதற்காக வரிசைகளில் காத்திருப்பவர்களுக்கு, மாற்றங்களைச் செய்ய முடியாத வகையில் சீல் வைக்கப்பட்ட 'ரோக்கன்' வழங்கப்படும். முப்படையினர் மற்றும் பொலிஸார் இதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவர். 'ரோக்கன்' வழங்கும்போது, சம்பந்தப்பட்டவர்களின் தொலைபேசி இலக்கமும் பெறப்படும்.

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் வந்ததும், விநியோகிக்கக்கூடிய அளவான வாகனங்களுக்கு அறிவிக்கப்பட்டு, விநியோக சேவை இடம்பெறும். உதாரணமாக 6 ஆயிரத்து 600 லீற்றர் எரிபொருள் வருமானால், வாகனமொன்றுக்கு 30 லீற்றர் வீதம் வழங்கப்பட வேண்டுமெனில் 'ரோக்கன்' வழங்கப்பட்ட முதல் 220 பேருக்கும் அழைப்பு விடுக்கப்படும்.

கப்பல்கள் வரும்வரை எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருளை வழங்கமுடியாது. எனவே, வரிசைகளில் காத்திருக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். ரோக்கனை வாங்கிய பிறகு வீடு செல்லுங்கள் என்று குறிப்பிட்டார். (அ-ஒ,இ)

## மின்வெட்டு....

நடைமுறைப்படுத்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. தற்போது 2 மணித்தியாலங்கள் நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டு இந்த வாரம் ஒரு மணி நேரத்தால் அதிகரிக்கப்பட்டு 3 மணித்தியாலங்கள் ஆக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஏ முதல் டபிள்யூ வரையான வலயங்களில் பகல் வேளையில் ஒரு மணித்தியாலம் 40 நிமிடங்களுக்கும் இரவு வேளையில் ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்களுக்கும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சிசி வலயங்களில் எதிர்வரும் ஜூலை 2 மற்றும் 3 ஆம் திகதிகளை தவிர ஏனைய நாள்களில் காலை 6 மணி முதல் 8 மணி வரை 2 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

எம், என், ஓ, எக்ஸ், வை, சட் வலயங்களில் அதிகாலை 5 மணி முதல் 8 மணி வரை 3 மணித்தியாலங்களுக்கு மின்வெட்டை நடைமுறைப்படுத்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது. (அ-ஒ)

## நகரப்...

கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் பிரச்சினை காரணமாக, நாடு முழுவதுமுள்ள அனைத்து பிரதான நகரங்களிலும் உள்ள பாடசாலைகள் கடந்த வாரம் இயங்கவில்லை. எனினும், இணையவழி கற்பித்தலை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் தொடர்பில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மேல் மாகாணம் உட்பட சகல மாகாணங்களிலும் உள்ள கல்வி அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோரின் போக்குவரத்துக்கு சிரமங்கள் ஏற்படாத வகையில் பிரதேச மட்டத்தில் குறைந்த மாணவர் எண்ணிக்கையை கொண்ட பாடசாலைகளை நடத்துவதற்கு மாகாண கல்வி அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

சில பாடசாலைகளுக்கு சமுகமளிக்க முடியாத மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, வலய கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடி பொருத்தமான தீர்மானத்தை மேற்கொள்ள பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு அதிகாரம் வழங்கியிருந்தது.

பாடசாலை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் சில மாணவர்களுக்கு பாடசாலைகளுக்கு சமுகமளிக்க முடியாவிட்டால் அவர்களுக்கு இணையவழி ஊடாக கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சு அறிவுறுத்தி இருந்தது.

இந்த நிலையில், குறித்த காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்ததுடன், நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையையும் கருத்திற்கொண்டு இந்த வாரமும் அனைத்துப் பிரதான நகரங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

## தெல்லிப்பழை...

ஆதார மருத்துவமனையில் நேற்று மாலை 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருந்துக் களஞ்சியத்துக்கான பிரதான ஆழிப் பகுதியில் (மெயின் சுவிட்ச்) ஏற்பட்ட மின் ஒழுக்கால் ஏற்பட்ட தீ விபத்திலேயே இவை அழிவடைந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ-ஒ,5,125)

## சேமிக்கப்பட்ட....

ழுந்துள்ளனர் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. மேலும், இவர்களது இரண்டு பிள்ளைகளும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இவர்களது வீட்டில் கொள்கலனில் சேமிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த பெற்றோலே தீ விபத்துக்கு காரணம் என்று தாம் சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ஒ,5)

## அரச பணியாளர்களுக்கு...

அத்தியாவசியப் பணியாளர்களை மாத்திரமே நிறுவனத்துக்கு அழைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், உத்தியோகத்தர்களை வீட்டிலேயே தங்கவைத்து, அவர்களின் சேவைகளை இயலுமானவரை இணையத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைப்பது தொடர்பான முடிவுகள் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலர் அல்லது மாகாணங்களின் பிரதம செயலர்களின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையுடன் எடுக்கப்படுவதை நிறுவனத் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தக் காலப்பகுதியில் எரிபொருள் பாவனையைக் குறைப்பதற்கு உத்தியோகத்தர்களின் பயணங்கள் மட்டுப்படுத்தப்படவேண்டும் எனவும் அனைத்து சந்திப்புகளும் கலந்துரையாடல்களும் இணையத்தில் நடத்தப்பட வேண்டும் எனவும் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ஒ,இ)

## பணம்...

தெரிவித்ததாவது:-

எரிபொருள் கொள்வனவுக்காக உள்ளூர் வங்கிகளில் திறக்கப்படும் நாணயக் கடிதங்களை (எல்.சி.) வெளிநாட்டு வங்கிகள் ஏற்காத நிலைமை காணப்படுகின்றது. இதில் உள்ள அபாயம் காரணமாக இலங்கைக்கு எரிபொருளை விற்பனை செய்ய விநியோகஸ்தர்கள் தயக்கம் காட்டுகின்றனர். சிலர் பணத்துக்கு கூட வழங்கத் தயாராக இல்லை.

புதிய விநியோகஸ்தர், இலங்கைக் கடற்பரப்புக்குள் தனது எரிபொருள் கப்பல் வருவதற்கு முன்னராகவே பணம் கோரியமையால், முன்னைய பெற்றோல் கப்பலுக்கான கட்டளையை இடைநிறுத்தியுள்ளோம்.

மேலும் எரிபொருளுக்காக மாதாந்தம் 650 மில்லியன் டொலர் தேவைப்படுகின்றன. அதனை 350 மில்லியன் டொலராகக் குறைத்தாலே நிலைமைகளைச் சமாளிக்க முடியும்- என்றார். (அ-ஒ,5)

## எரிபொருள்...

லீற்றர் ஒன்றின் விலை 50 ரூபாவால் அதிகரித்து, புதிய விலை 470 ரூபாவாகவும், 95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 100 ரூபாவால் அதிகரித்து, புதிய விலை 550 ரூபாவாகவும், ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 60 ரூபாவால் அதிகரித்து, புதிய விலை 460 ரூபாவாகவும், லங்கா சுப்பர் டீசலின் விலை 75 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, புதிய விலை 520 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேவேளை- லங்கா ஐ.ஓ.சியும் சிபெட்கோ விலை அதிகரிப்புக்கு நிகராக எரிபொருள் விலைகளை அதிகரித்துள்ளது.

137 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பெற்றோலின் விலை 2 ஆண்டுகளின் பின்னர், கடந்த ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி 157 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

அன்றிலிருந்து நேற்று வரையான ஒரு வருடத்துக்குள் 5 தடவைகள் விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 313 ரூபாவால் அதிகரித்து 470 ரூபாவாக பெற்றோலின் விலை எகிறியுள்ளது. (அ-ஒ,5)

## எரிபொருள் அட்டையுடன்...

இடம்பெறும். அமைச்சர் அறிவித்த ரோக்கன் நடைமுறையை அதனுடன் இணைத்து மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம் என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

எரிபொருள் அட்டைக்கு விநியோகம் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் யாழ். மாவட்டச் செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், ரோக்கன் நடைமுறையை எரிபொருள் விநியோகத்தில் பின்பற்ற அமைச்சர் காஞ்சன நேற்று அறிவித்திருந்தார். இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் எந்த நடைமுறை பின்பற்றப்படவுள்ளது என்று மாவட்டச் செயலரிடம் கேட்டபோது, 'இரண்டும் இணைந்த நடைமுறையைப் பின்பற்ற எதிர்பார்க்கின்றோம்' என்று மாவட்டச் செயலர் பதிலளித்தார். (அ-ஒ,5,125)

## 21ஆம் திருத்த...

கப்படவுள்ளது. 22ஆம் திருத்தச் சட்டம் என்று அந்த வரைவு மாற்றப்பட்டுள்ளதுடன், உள்ளடக்கத்திலும் சில விடயங்கள் மாற்றப்பட்டுள்ளன. அதனால் அமைச்சரவையின் அனுமதிக்காக மீண்டும் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் சட்டவரைவும் 21ஆம் திருத்தச் சட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், நீதி அமைச்சர் விஜயதாஸ சமர்ப்பித்த சட்டவரைவு 22ஆம் திருத்தச் சட்டவரைவு என்று மாற்றி அமைச்சரவையின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,5)

## இ.போ.ச....

யாழ்ப்பாணச் சாலை தவிர்ந்த ஏனைய சாலைப் பணியாளர்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப்போன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்று தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் பணிக்கு வருவதற்கு பெற்றோல் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி, வடமாகாணத்தில் உள்ள 7 சாலைகளும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதென நேற்று தீர்மானிக்கப்பட்டது. வடபிராந்திய சாலை தொழிற்சங்கங்கள் இது தொடர்பான அறிவிப்பை விடுத்திருந்தன.

' சகலரும் பணிக்குச் செல்வதற்கான பொதுப்போக்குவரத்தை அர்ப்பணிப்போடு மேற்கொண்டு வரும் எமது பணியாளர்கள், பணி நிலையமான டிப்போவுக்குச் செல்ல பெற்றோல் இல்லாமல் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எமது நிலையை எவரும் கணக்கெடுக்கவில்லை. இந்த நிலையிலேயே, எமது பணியாளர்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்படும்வரை வடக்கு மாகாணத்தில் உள்ள வ.பி.போ.சபையின் சகல சாலைகளையும் சேர்ந்த அனைத்துப் பணியாளர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம்' என அறிவித்தனர்.

இதனையடுத்து, வ.பி.போ.சபையின் பொது முகாமையாளருடன் பேச்சு நடத்திய, வடக்கு மாகாண ஆளுநர் , யாழ். மாவட்டச் செயலர் ஆகியோர் யாழ் மாவட்டத்திலுள்ள சாலை ஊழியர்களுக்கான எரிபொருளை வழங்க உத்தரவாதமளித்துள்ளார்கள். ஒவ்வொரு ஊழியருக்கும் ரூ. 2 ஆயிரம் பெறுமதியான பெற்றோல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கிலுள்ள கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு சாலை ஊழியர்களுக்கான எரிபொருள் வழங்கலை . தான் ஒழுங்கமைத்து வருவதாக வடமாகாண ஆளுநர் உத்தரவாதமளித்துள்ளார்.

இருப்பினும் இந்த உத்தரவாதத்தை ஏற்றுக் கொள்ள தொழிற்சங்கங்கள் மறுத்துள்ளன. முதலில் தமக்கு பெற்றோல் கிடைத்த பின்னரே சேவையில் ஈடுபடுவோம் என்று அவை அறிவித்துள்ளன.

'உறுதியளிக்கப்பட்டவாறு பெற்றோல் கிடைக்கப்பெற்றால் மாத்திரமே எமது பணிப்புறக்கணிப்பை கைவிடுவோம்' என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. (அ-ஒ,5,26,125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### துப்பாக்கிகளுக்கு விண்ணப்பிக்கும் எம்.பிக்கள்

கொழும்பு, ஜூன் 27
துப்பாக்கிகளை இது வரை பெற்றுக்கொள் ளாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வொன்று துப்பாக்கி கோரி விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.
தற்போதைய நாட்டு நிலைமைகளால் தமது பாதுகாப்பைக் கருத் திற் கொண்டு நாடாளு மன்ற உறுப்பினர் குழு இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக நாடாளுமன்றத் தகவல் கள் தெரிவிக்கின்றன.
நாடாளுமன்றுக்கு இம் முறை தெரிவு செய்யப் பட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த துப்பாக்கிகளுக்கான விண்ணப்பங்களை நாடாளுமன்ற சேவை கள் பிரிவுக்கு சமர்ப்பித் துள்ளதுடன், அவை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தன் பின்னர் துப்பாக்கி கள் வழங்கப்படும். (ஒ-இ)

# கருக்கலைப்புக்கு அமெரிக்கா தடை

## உச்சநீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

வொஷிங்டன், ஜூன் 27
அமெரிக்காவில் கருக்கலைப்பு உரிமையை தேசிய அளவில் சட்டபூர்வமாக்கிய 50 ஆண்டுகால உத்தரவு நீக்கப்பட்டு கருக்கலைப்பு உரிமைக்கு அந்நாட்டு உச்சநீதிமன்றம் நேற்றுமுன்தினம் தடை விதித்துள் ளது. அமெரிக்காவில் 1973ஆம் ஆண்டில் "கருக்க லைப்பு என்பது பெண்ணின் தனிப்பட்ட உரிமை. அது அரசமைப்பு உரிமை" என்று தீர்ப்பளிக்கப்பட்டது.
அதேபோல் 1992ஆம் ஆண்டில் "22 முதல் 24 வார கர்ப்பத்தை சம்பந்தப்பட்ட பெண் சட்டபூர்வமாகக் கருக் கலைப்பு செய்து கொள்ளலாம்'' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.
இந்த நிலையில் அமெரிக்காவில் கருக்கலைப்பு உரி மைகளின் சட்டம் மாற்றப்பட்டு கருக்கலைப்பு உரி மைக்கு அந்நாட்டு உச்சநீதிமன்றம் தடைவிதித் துள்ளது.
இந்தத் தீர்ப்புக்கமைய அமெரிக்காவின் 13 மாகாணங் களின் கருக் கலைப்பு தடைச் சட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது. அதேபோல் அமெரிக்காவிலுள்ள ஏனைய மாகாணங்களில் கருக்கலைப்புக்கு தடை விதித்தல் அல்லது கருக்கலைப்புக்கான விதிகளைக் கடுமையாக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் போன்ற வற்றை நிறைவேற்றவுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக் கின்றன.
இதேவேளை, கருக்கலைப்பு உரிமையை ரத்துச் செய்தமையை எதிர்த்து அமெரிக்காவின் பல்வேறு மாகா ணங்களில் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற னர். (ச-இ)

உயர்தர பௌதீகவியல் வகுப்புகள் (A/L)
பிரத்தியேக, குழு வகுப்புக்கள்,
கடந்த கால வினாக்கள் செய்துவிடப்படும்.
சொ.குணவர்சன் B.Sc.
077 538 8670

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 - 09 - 1942



மறைவு
26 - 06 - 2022

### மனோகரசீலன் விஜயராணி

யாழ் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மனோகரசீலன் விஜயராணி அவர்கள் நேற்று (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு மனோகரசீலன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான காராளப்பிள்ளை. லீலாவதி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு. இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தங்கராசா. காலஞ்சென்ற விஜயலட்சுமி. விஜயகுமாரி. வசந்தமனோகரி. காலஞ்சென்ற விமலாதேவி. ரட்ணகோபாலஅமரசூரியன் ஆகியோரின் சகோதரியும் ரூபாவதி. காலஞ்சென்ற குலேந்திரசீலன். பிறேமாவதி. உருத்திராவதி. சத்தியவதி. நிர்மலாதேவி. வக்சலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சுதாகரன். சுகன்யா (Germany). சுரேகா (Manipay). ஜயந்தன் (சுயா-Germany) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்சினி (France). சிறிதரன் (Germany). றிச்சாட் (France). சுபாசினி (Germany) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வைஸ்ணவி. கோஷிகன். பபிசியன். பிறிந்திக்கா. யுகாசினி. லதுசன். பூமிகா. புருசோத். தன்சிகா. லோஜிதன். சுஜிதா. பபிசனா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2022) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்: குடும்பத்தினர்.

## நீங்கா நினைவலைகள்

11ஆம் ஆண்டு 12ஆம் ஆண்டு

பிறப்பு 05.02.1933

பிறப்பு 04.06.1935



இறப்பு 30.06.2011

இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சதுர்த்தசி (27.06.2022)

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

### திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

திதி: பூர்வக்க அட்டமி (05.08.2022)

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா.....

நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா......
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
மகன் - 077 774 3185

மாதகல் மேற்கு,
மாதகல்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 - 06 - 1947



மறைவு
24 - 06 - 2022

### திருமதி
### வேலாயுதபிள்ளை கமலாம்பிகை

மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை கமலாம்பிகை அவர்கள் கடந்த (24.06.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இலட்சுமிபிள்ளை தம்பதிகளின் மருமகளும் கிருபாகரன், சிவாகரன், ஜெயாகரன், சசிகலா, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் நீத்தா, மஞ்சுளா, வாசுகி, ரங்கநாதன், இந்திரவதனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிசோக், தக்ஷி, அஜய், மாதங்கி, யாதவன், தர்ணிகா, துளசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2022) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
வே.கருணாகரன் (மகன்)
021 205 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.